# காஞ்சி

நிறுவனர்:

1-9-68

விலை 20 காசு



# படையெடுப்பிற்குப் பிறகு........

## உலக அரங்கில்

ஆகஸ்டு திங்கள் 21-ம் நாளிலிருந்து 28-ம் தேதிவரையில் கிடைத்துள்ள செய்திகளின்படி செக்கோஸ்லாவாகியா மீது ரஷ்யாவும் போலந்து முதலான சில நாடுகளும் ஏக காலத்தில் படையெடுப்பு நடத்தி, செக். மக்களது ஜனநாயக உரிமைக்கு சிகப்புவர்ணம் பூசப்பட்ட நிகழ்ச்சி, உலக ஜனநாயகவாதிகளின் கண்ணீராக வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. இது தொடர்பாக ஐ. நாவில் பரபரப்பான தீர்மானம் மீது இந்தியா வாக்களிக்க மறுத்ததும், அதன் எதிரொளி, இந்தியத் துணைக்கண்டத்து பாராளுமன்றத்தை ஒரு உலுக்கு உலுக்கி, அசோக்மேதாவை, அமைச்சர் பதவியைவிட்டு விலகச் செய்துவிட்டதுடன், இந்திய அரசையும் ஒருவித நெருக்கடி நிலையில் கொண்டுவந்து நிறுத்திவிட்டதும் பரிதாபகரமான நிகழ்ச்சிகளேயாகும் செக். நாட்டின் மீதான ரஷ்யாவின் இந்த அடாவடியை உலகத்து நாடுகள், சீனு உட்பட கண்டித்திருக்கிறது. வெறும் கண்டனம் மட்டுமல்ல—பலமான கண்டனங்களே பொழியப்பட்டுள்ளன. என்றுலும் இந்தியா, ஏன் பசப்புமொழி கூறிக்கொண்டிருக்கவேண்டும என்பதுதான் புரிந்துகொள்ள முடியவில்லை. முன்பொரு சமயம் வியட்நாம் விவகாரத்தில் காலஞ்சென்ற பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி தம் கருத்தறிவித்த காரணத்துக்காக, ஒப்புக்கொள்ளப்பட்டிருந்த அவரது அமெரிக்க விஜயத்தை, ஜான்சனே முன்வந்து ஒத்திவைத்தபோதுகூட அதுபற்றி அதிர்ச்சி அடையாமல் மேலும் மேலும் தம் கருத்தினை வலியுறுத்திக்கொண்டே வந்துகொண்டிருக்கிற நிலையில், இது அமெரிக்க நாட்டின் ஆத்திரத்தைக் கிளறும் ஒரு நிகழ்ச்சியாக விருந்தும், தொடர்ந்து தன் வீரப்பிரதாபத்தைக் காட்டிக் கொண்டே வருகிற போக்கு தலை சாய்ந்துவிடாத நிலையிலேயே, ரஷ்யாவின் இந்த அடக்குமுறைப் போக்கை — ஜனநாயகக் கொள்கையை மதிக்காத அருவெறுக்கத் தக்க நடைமுறையைத் ''துணிவாக'' எடுத்துக்காட்டுவதில் காட்டப்படுகிற தயக்கத்தின் பொருள் நமக்கு மட்டுமல்ல—நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கேகூட பிடிபடாமல்தான் இருக்கிறது!

அமெரிக்காவைவிட, அப்படியொன்றும் ரஷ்யாவின் மூலதன உதவியும் பொருளாதார உதவியும் அதிகம் என்று சொல்லிவிட முடியாது. ரஷ்யாவும் உதவி செய்திருக்கிறது. கணிசமான அளவுக்கும் அது இருக்கிறது. அமெரிக்காவோடு ஒப்பிடுகிறபோது அதிகமென்று கூற முடியாவிட்டாலும் கணிசமான அளவு இருக்கத்தான் செய்கிறது. ஆனாலும் அமெரிக்காவைக் கண்டிக்க ஏற்படுகிற தைரியம் ரஷ்யாவின் பக்கம்போக மறுப்பது ஏன்?

பாராளுமன்ற காங். உறுப்பினர்களுக்குக்கூட அந்த உரிமை தரப்படாமல்பறித்துக்கொள்ளப்பட்டிருப்பது ஏன்? இதில் கடைப்பிடிக்கப்படுகிற ராஜதந்திரப் போக்கு, மறைமுகமாக இருக்கவேண்டுமென்று மத்தியஅரசு கருதும் அளவுக்கு நிகழ்ந்திருப்பது என்ன?

செக். தலைவர் டுப்செக் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், இல்லையென்றும் அடுத்து அடுத்து வந்து கொண்டிருந்த செய்திகளுக்குப் பிறகு—ரஷ்யத் துருப்புகள் செக் நாட்டை எரிவாய்ப்படுத்திக் கொண்டிருக்கின்றன—பீரங்கிச் சண்டைகள் நடந்து கொண்டிருக்கின்றன—பொதுமக்கள் கூட, ஆயுதமேந்திப் போராடிக் கொண்டிருக்கின்றனர்—என்றுலும் செக். படைகளின் கரங்கள் சோர்ந்தே கிடந்தன—என்றெல்லாம் அடுத்தடுத்து வந்து கொண்டிருந்த செய்திகளுக்குப் பிறகு, இப்படையெடுப்பை அடுத்து, மீண்டும் செக்—ரஷ்யா பேச்சு—வார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும், அதனை யடுத்து ஐ.நா. மன்றம் கூட, தன் கண்டனத் தீர்மானம் பற்றிய வாதத்தைத் தள்ளி வைத்திருப்பதாகவும், பேச்சு வார்த்தை பலன் தந்துவிடக்கூடும் எனவும், மீண்டும் டுப் செக்கின் தலைமையும் பழைய ஆட்சியும் பதவி ஏற்கக்கூடும் என்றும் செய்திகள் வரத் தொடங்கி இருக்கின்றன.

ஜனநாயகப் படுகொலை நடந்துவிட்டதென்று கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும் நல்லோர்தம் நெஞ்சுக்கு நீவிவிடத்தக்க நல்லதொரு செய்தியே இவையென்றுலும், நிகழ்ந்துவிட்ட கொடுமை, இந்தியாவை இப்படி அலைக்கழித்து விட்டிருப்பது இரங்கத்தக்கதேயாகும். டுப் செக் மீண்டும் தலைமையில் அமர்த்தி வைக்கப்பட்டாலும், அசோக் மேதா மீண்டும் காங்கிரஸ் அமைச்சராவார் என்று கூறுவது பைத்தியக்காரத்தனமானதேயாகும். இதேபோல், கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதாக எடுக்கப்படவிருக்கிற ஒழுங்கு நடவடிக்கைகளிலிருந்து, சம்பந்தப்பட்டவர்கள் கட்சியை விட்டு வெளியேறினுலன்றி, யாரும் தப்பப் போவதில்லை, சுசேதா கிருபளானி உட்பட.

கம்யூனிஸ்டுகள் பாவம்! இரு தலைக் கொல்லி எறும்பு நிலை அவர்களுக்கு. ஜனநாயகம் வாழ்க! என்றும் குரல் கொடுக்க முடியவில்லை! டுப் செக் வாழ்க என்றும் சொல்ல முடியவில்லை!! ரஷ்ய நடவடிக்கையை ஆதரிக்கவும் முடியவில்லை. இந்திய அரசின் நிலையைவிட, இவர்கள் நிலை இன்னும் இரங்கத்தக்கது! எதெற்கு வக்காலத்து வாங்க முயன்றுலும், ரஷ்யாவின் இந்தச் செயலுக்கு வக்காலத்து வாங்கிப் பேச முடியாத நிலை! இந்திய அரசைப் போல் பட்டும் படாமல், தொட்டும் தொடாமல் இருக்கிற ஒருநெருக்கடி!

மாசேதுங்கின் செஞ்சீனுவுக்கும், கோசிகினுடைய ரஷ்யாவுக்கும் கொள்கைப் போட்டி பலமாக இருந்தாலும் யார் பகுதியை யார் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிருர்கள் என்ற கண்டனக் குறிப்புக்களை ஒருவருக்கொருவர் அனுப்பிக்கொண்டிருந்தாலும், செக். நாட்டைப் பொறுத்த மட்டில், அது தன் சிந்தனையை ஜனநாயகக் கோட்பாட்டின் மீது செலுத்தி, அதன் வழிப்பட்ட கொள்கையை வகுத்துக்கொள்ள முயன்றது ஒரு குற்றம் என்பதற்காகவே இப்படி ஒரு படையெடுப்பு என்பது செய்தியாகக் கிடைத்துக் கொண்டிருக்கிற வரையில், அதாவது கம்யூனிசச் சித்தாந்தத்தை செக். கை கழுவிவிட முயல்கிறது என்பதற்காக படையெடுத்திருக்கிற ஒரு நிகழ்ச்சியை, சீனு கண்டித்திருக்கத் தேவையில்லை! என்றுலும் பலத்த கண்டனம் தெரிவித்திருக்கிறது!!

இந்தியாவுக்கு அப்படியும் கண் தெரியவில்லை. கருத்துத் தெளிவும் ஏற்படவில்லையே. —சீயேயெம்

# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாதம் ரூ. 5

மலர் 5 1—9—68 இதழ் 6


# பண்டாவுக்கு மீண்டும் பதவி!

தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம், தன் படைபலத்தைப் பயன்படுத்தி, இலங்கையின் மீது படையெடுத்து—தன்னைத் துரத்திவிட்டுவிட்டு, ஆட்சியில் அமர்ந்திருக்கும் திரு. சேனநாயகா அவர்களை, பதவியைவிட்டு விரட்டிவிட வேண்டும் என்பதில் தீராத விருப்பம் இருப்பதனை திருமதி பண்டாரநாயகா அவர்கள் அடிக்கடி வெவ்வேறு விதமான சொற்றொடர்களால் விளக்கிக் கொண்டே வருவது வருந்தத்தக்கதாகும்.

தீயவை, தீய பயத்தலான் தீயவை தீயினும் அஞ்சப்படும் என்ற நீதியையே அகிலத்துக்கு அளித்திருப்பது தமிழகம், அவ்வாறிருக்கும்போது தீயதான இந்தக் கருத்தை திருமதி. பண்டா அவர்களால் எப்படித்தான் கற்பனை செய்துபார்க்க முடிந்ததோ தெரியவில்லை.

திருமதி, பண்டாவுக்கு தமிழகத்தின் மீதும் தி. மு. கழகத்தின் மீதும், இங்குள்ள காங்கிரசுக்காரர்களைவிட அதிகமான காழ்ப்பு இருப்பதற்குக் காரணம் எதுவாயிருக்கக் கூடும் என்பதனை யூகிக்கக்கூட முடியவில்லை.

இலங்கையில் தமிழகத்துக்குத் துளியும் தொடர்பில்லாத வகையில் முழுக்க முழுக்க தனித்தே இயங்கிக்கொண்டு வருகிற தி. மு. கழகத்தைக் காய்ந்துகொள்ள வேண்டும் என்று கருதுகிறபோதெல்லாம், இலங்கை தி. மு. க, வையும் தமிழகத்தையும் இணைத்து இணைத்துக் காய்ந்துகொள்ள அவர் மறந்தும் தவறுவதில்லை.

இலங்கைக் கழகத்துக்கும், தமிழகக் கழகத்துக்கும் துளியும் தொடர்பில்லை என்று தமிழக தி. மு. க. பொதுச் செயலாளர் என்ற முறையிலும், தமிழக அரசின் முதலமைச்சர் என்ற வகையிலும் அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் மிகத் தெளிவாக விளக்கிச் சொல்லி இருப்பதுடன், கடந்த ஆண்டு, இது தொடர்பாக ஒரு அறிக்கையும் வெளியிட்டிருந்தார்கள்.

என்றாலும், எங்கோ ஓர் மூலையில் படுத்துறங்கிக் கொண்டிருந்துவிட்டு, கூட்டத்துக்கு அழைப்பு வந்தவுடன் வேக வேகமாக ஓடிச் சென்று மேடையேறி நின்று, கழகத்தைத் தூற்றுவதென்பது அவரது வாடிக்கையாக இருப்பதிலிருந்து உலக அரசியல் நிகழ்ச்சிகளையும், அன்றாட நாட்டு நடப்புக்களையும் தெரிந்து வைத்துக் கொண்டுதான் அரசியல் மேடை ஏறுகிறார் என்பதனை நம்பமுடியாமலேபோய்விடுகிறது.

இலங்கை அரசியல், இந்தியத் துணைக் கண்டத்துக்கு அரசியலுக்கு, குறிப்பாகத் தமிழகத்தின் அரசியலுக்கு மிக மிக அப்பாற்பட்டதொன்று என்பதுடன் தொடர்பே இல்லாத ஒன்று என்பது நடைமுறையாயிருந்தும், "தமிழ்நாடு இலங்கைமீது படையெடுக்கும்" என்று அவர் திரும்பத் திரும்பச் சொல்லி வருவது, படையெடுக்க வேண்டும் என்ற அவரது இதய வேட்கையை வெளிப்படுத்திக் காட்டுவதாகத்தான் பொருள் கொள்ள முடியும்.

சென்னை மாநிலம் என்ற பெயரை, "தமிழ் நாடு" என்று இங்குள்ள ஆட்சி. மாற்றம் செய்ய விரும்புவதற்கும், இலங்கைமீது படையெடுப்பது என்பதற்கும் என்ன தொடர்பு என்பதே புரியவில்லை.

தமிழகத்தில், தி, மு. க. தமிழர் நலனுக்காக "தமிழர் படை" என்ற பெயரில் இளைஞர் கழகமொன்று அமைத்திருப்பதற்கும், இலங்கைமீது ராணுவப் படையெடுப்பிற்கும் என்ன சம்பந்தமிருப்பதாக திருமதி. பண்டாவினால் உணர முடிகிறது என்பதும் புலனாகவில்லை,

தமிழகம், இலங்கையின்மீது படையெடுத்த காலம் ஒன்றுண்டு. அது கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலும், கி. பி. இரண்டு அல்லது மூன்றாம் நூற்றாண்டிலும், இறுதியாக பதின்மூன்றாம் நூற்றாண்டிலும் நடைபெற்றிருக்கிறது.

முதல் படையெடுப்பின் மூலம்தான் ஏழாரன் என்று இலங்கையின் மகாவம்சம் விளிக்கும் எள்ளாளச் சோழப் பேரரசன், இலங்கைக்கே மறு வாழ்வளித்து நாகரிகமுடைய—ஒரு ஒழுங்கு நியதிக்குட்ட அரசியலை வகுத்தளித்திருக்கிறான் என்பதனை திருமதி பண்டா புரியாமல், இந்தப் படை எடுப்புக்கள் பற்றிப் பேசி இருக்க முடியாது.

அடுத்தடுத்தப் படையெடுப்புக்களிலும், இலங்கை புதுவாழ்வும், பொலிவும் தான் பெற்றிருக்கின்றன. எனவே, அவைகளை எல்லாம் எடுத்துச் சொல்லி இப்போது மீண்டும் தி. மு. கழகம் படையெடுக்கும் என்று கற்பனை செய்வதன் மூலம் வளர்ந்து வந்திருக்கிற அகிலத்தின் அரசியலையும், உலகப் போக்கையும் புரிந்துகொள்ள முடியாதவர் திருமதி பண்டா என்றுதான் முடிவு கட்ட வேண்டி இருக்கிறது.

எனவே, இலங்கையின்மீது தமிழகம் படையெடுக்கும் என்று சொல்வதெல்லாம், அப்படி எடுத்தாவது இப்போதைய ஆட்சியினை அழிக்காதா என்ற அற்ப ஆசையைக் காட்டிக் கொள்ளவேதான் பயன்பட முடியுமே ஒழிய, உலகை ஏமாற்றிதான் மீண்டும், பதவியில் அமர, அது வழி ஏற்படுத்தாது என்பதை உணர்ந்து கொண்டு, ஒழுங்கான—நாணயமான—உள்நாட்டு அரசியலை அவர் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்!


மாண்புமிகு அமைச்சர்

மா. முத்துசாமி

அவர்களது

## இரஷ்யப் பயணம்

பற்றிய தொடர் கட்டுரை

விரைவில் காஞ்சியில் வெளியாகிறது.



# இலண்டனில் இருபது நாட்கள்

தமிழகப் பாராளு மன்ற கழகம் என்னைத் தேர்ந்தெடுத்தவுடன் இலண்டன் செல்ல செய்யவேண்டிய வேலையைத் தொடங்கினேன்.

அடிக்கடி வெளிநாடு சென்று வரும் அனுபவம் பெற்ற அருமை நண்பர்கள் திரு. எம். எஸ். பி. ராஜேஸ், ராஜா ஆகியோர் நான் இலண்டன் செல்லும்போதும் திரும்பும்போதும் வேறு சில நாடுகளையும் பார்த்து வரத்தக்கபடி எனது பிரயாணத் திட்டத்தை வகுக்கும்படி "ஏர் பிரான்ஸ்" விமானக் கம்பெனியைச் சேர்ந்த திரு. கோபாலிடம் கூறினர். அதன்படி கிரீஸ், பிரான்ஸ், ஜெர்மனி, ஸ்வீடன். இதாலி போன்ற நாடுகளுக்கும் நான் செல்லத்தக்கபடி எனது பிரயாணத் திட்டம் வகுக்கப்பட்டது.

தமிழகச் சட்ட சபைச் செயலாளர் திரு. நடராஜன் உதவிச் செயலாளர் திரு. இராகவன் ஆகியோர், எனக்குப் பாஸ்போர்ட்டும், அந்நியச் செலாவணியும் துரிதமாகக் கிடைக்க முயன்றனர்.

காமன்வெல்த் பார்லிமெண்டரி கழக சார்பில் எனக்கு முன் வெளிநாடுகள் சென்று திரும்பிய நாவலர் கனம் நெடுஞ்செழியன் அவர்கள் பற்பல விபரங்களை எனக்குக் கூறினர்.

எனது வாழ்க்கைக் குறிப்புகளும், எனது உணவு வகை பற்றியும், நான் இலண்டன் சேர்கிற தேதி பற்றியும் இலண்டன் காமன்வெல்த் பாராளு மன்ற கழகப் பொதுச்செயலாளர் திரு. ராபின் வெண்டர் பெல்ட் அவர்களுக்கு விரிவான கடிதம் ஒன்றைத் தமிழகச்சட்ட மன்றச் செயலாளர் திரு.நடராஜன் அவர்கள் எழுதினர்.

என் முழுப் பெயரையும் உச்சரிக்க வெளிநாட்டவர்கள் கஷ்டப்படுவர் என்பதற்காக, என்னை "மிஸ்டர் தம்பி" என்று கூப்பிடலாம்—என்பதையும் செயலாளர் திரு.நடராஜன் அவர்கள் கோடிட்டுக் காட்டியிருந்தார்.

1968 ஏப்ரல் 30 முதல் மே மாதம் 28 தேதி வரை எங்கெங்கே என்னென்ன நிகழ்ச்சிகள்—என்ற விவரங்களை இலண்டன் காமன்வெல்த் பாராளுமன்ற கழகம் முன் கூட்டியே அனுப்பிவைத்தது.

இதன் பின் 1968 ஏப்ரல் 25 ல் நான் புறப்படுவதாக முடிவாகி, டில்லி, பம்பாய் வழியாக ஏதன்ஸ், நீஸ் பாரீஸ் போய்விட்டு இலண்டனுக்கு ஏப்ரல் 30 ல் போய்ச்சேர்வதாகவும், ஏப்ரல் 30 முதல் மே மாதம் 28 வரை இலண்டன் காமன்வெல்த் பாராளுமன்ற கழக நிகழ்ச்சிகள் முடிந்தபின் பெர்லின், பிராங்பர்ட், ஜினீவா, ரோம், கெய்ரோ, பெய்ரூட் போய்விட்டு பம்பாய் வழியாக ஜூன் 5ல் சென்னை வருவதாகவும் திட்டம் முடிவாகியது. இதன்படி டிக்கட் எடுக்கப்பட்டது.

இந்தப் பிரயாணத் திட்டம் நன்கு அமைந்திருப்பதாக அறிஞர் அண்ணா அவர்கள் பாராட்டினார்கள். நான் புறப்படுவதற்குப் பத்து நாட்களுக்கு முன்பே அறிஞர் அண்ணா அவர்கள் அமெரிக்காவுக்கு அதாவது 1968 ஏப்ரல் 15 ல் புறப்பட்டார்கள்.

எனது பிரயாணத் திட்டப்படி என்னை வெளிநாட்டில் ஆங்காங்கே சிலர் சந்தித்து உதவத் தக்க ஏற்பாடுகளை எனது நண்பர் தூத்துக்குடி திரு. வெ. வ. த. தனபாலன் அவர்கள் முன் கூட்டியே செய்தார். இதே போல் இலண்டனில் எனக்கு உதவ டாக்டர் லட்சுமிபதி அவர்களுக்கு வைத்திய டைரக்டர் டாக்டர் திரு. ஜர்னுத்தனமும், மிஸ். பமேல்லாஹலன், சினிமா டைரக்டர் திரு. சுப்ரமணியமும் கடிதம் எழுதினர்.

ஏர் பிரான்ஸ்—கோபால் அவர்கள் எனது விசாவுக்கும் வெளிநாடுகளில் தங்கும் ஹோட்டல் ரிசர்வேசனுக்கும் உரிய வேலைகளைச் செய்து முடித்தார். வெளி நாடுகளில் அணிய வேண்டிய ஆடைகளும் தக்கபடி தயாரிக்கப்பட்டது. வெளிநாடுகளில் அவரவர் சாமான்களை அவரவர்களே பெரும்பாலும் தூக்குவது வழக்கம் என்றும்—போர்ட்டர் உதவி என்பது அதிகச் செலவு ஆகும் என்றும்—அனுபவப்பட்டவர்கள் சொன்னதால், ஒரே பெட்டியிலேயே என் சாமான்களை வைத்தேன்.

1968 ஏப்ரல் 25ல் காலை 9 மணிக்கு சென்னை மீனம்பாக்கத்தில் இருந்து இந்தியன் ஏர்லைன்ஸ் 440 • விமானத்தில் டில்லிக்குப் புறப்பட்டேன்.

அமைச்சர்கள் கனம் கருணாநிதி, சாதிக்பாட்சா, அதிகாரிகள் கழகத் தோழர்கள், நண்பர்கள் பலர் விமான நிலையத்திற்கு வந்து என்னை வழியனுப்பினர்.

என்னோடு விமானத்தில் நண்பர் சிட்டிபாபு எம்.பி. அவர்கள் டில்லிக்கு உடன்வந்தார். அதே விமானத்தில் திரு. ஓ. வி. அளகேசன், மோகன் குமாரமங்கலம் ஆகியோரும் டில்லி வந்தனர். இரண்டேமுக்கால் மணி நேரத்தில் விமானம் டில்லி வந்து சேர்ந்தது.

டில்லியில் உள்ள "மெட்ரூஸ் ஹவுஸ்" கார் முன் ஏற்பாட்டின்பேரில் விமான நிலையத்திற்கு வந்திருந்தது. தமிழக அரசின் "மெட்ரூஸ் ஹவுசில்" பெட்டியை வைத்துவிட்டு, நானும் நண்பர் சிட்டிபாபுவும், டில்லி பாராளுமன்றத்திற்குச் சென்றோம்.

திராவிட முன்னேற்ற கழகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரை சந்தித்துவிட்டு தமிழக அரசின் மாளிகைக்கு வந்தேன் அமைச்சர் கனம் சத்தியவாணி அம்மையார் அவர்கள் பிள்ளைகளோடு அப்போதுதான் இரயில் மூலம் அங்குவந்து சேர்ந்தார்கள்.

அன்று இரவு நண்பர் நாஞ்சில் திரு. மனோகரன் இல்லத்தில் விருந்து இருந்தது. நண்பர் மனோகரன் தான் வெளிநாடுகளுக்குச் சென்று வந்த அனுபவங்களை எனக்குச் சொன்னார்.

மறுநாள் 1968 ஏப்ரல் 26 காலை 9 மணிக்கு டில்லி பாலம் விமான நிலையத்தில் இருந்து இந்தியன் ஏர்லைன்ஸ் 182 விமானமூலம் பம்பாய் புறப்பட்டேன்.

நண்பர் திரு.ராஜாராம் உள்பட கழக பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர் கனம் சத்தியவாணிமுத்து அவர்களும் என்னை வழி அனுப்ப டில்லி விமான நிலையத்துக்கு வந்தார்கள்.

டில்லியில் இருந்து இரண்டே மணி நேரத்தில் விமானம் பம்பாய் வந்து சேர்ந்தது. பம்பாய் விமான நிலையத்தில் கழகத் தோழர் திரு. பொற்கோ உள்பட நூற்றுக் கணக்கானவர்கள் என்னை வரவேற்றனர்.

விமான நிலைய ஹோட்டலிலேயே எனக்கு ரூம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பம்பாய் அரசியல் பற்றியும். தமிழர்கள் நிலை பற்றியும் நண்பர்கள்கூறினர். அன்றுஇரவு 8.15க்கு ஏதன்ஸ் புறப்படத்தயாரானேன்.

தமிழக உடுப்புகளை நீக்கிவிட்டு, மேல் நாட்டு ஆடைகளை அணிந்து கொண்டேன். நண்பர்கள் மாலை அணிவித்து வழி அனுப்பினர். அனைவரிடமும் விடை பெற்று விமான கஸ்டம்ஸ் நிலையத்திற்குள் சென்றேன். (வளரும்)

ஏ.வி.பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ.



# வேடனும் வெண்புறாவும்

1.9.68

**எஸ்.எஸ். தென்னரசு**

## 5. வினை விதைத்தாளே—தினையா விளையும்?

மேன்மை தங்கிய பிதாவுக்கு!

இளைய மகன் பெர்க்ளீஸ் வரையும் முதல் முடங்கல். நூறு தினங்கள் கடந்து, நெஞ்சம் வெதும்பிய பின் ஆறுதல் முடங்கல் எழுதுகிருனே என்று சஞ்சலப்படுவீர்கள். உண்மை தான். நம்மிடையே தோன்றியிருப்பது. யார் யாரை அமைதிப்படுத்துவது என்று கண்டுபிடிக்க முடியாத வகையில் உருவான ஒரு விசித்திரமான அரசியல் சிக்கல் என்பதைத் தாங்கள் அறிந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். ஆசை யாருடைய உள்ளத்தையும் கவர்ந்திடக்கூடியது. அதுவும் மணமுடைசை, அலங்கரித்த மோகினியைப்போல் மனித மனத்தை ஆட்டிவைக்கும் ஆற்றல் பெற்றது. நான் நாடாளப் போகிறேன என்று டெல்பியில் கூறப்பட்டுவிட்டது. இதைக் கேட்டுக்கொண்டும் நான் அரண்மனையிலிருந்தால் சிம்மாதனப் பித்து என்னைப் பிடித்துக்கொண்டு விட்டது என்று மற்றவர்கள் நினைக்கக்கூடும். முதலாவதாக அன்புள்ள அண்ணன அவர்கள் என்னைத் தவருகக் கருதிவிடக்கூடாது; டெல்பியின் ஆரூடத்தைத் துணையாகக்கொண்டு தம்பி சேனை திரட்டி எதிர்முகாம் அமைக்கக்கூடும் என்று எண்ணிவிடக் கூடாது. அடுத்தபடியாக நீங்கள் எங்களை நினைத்து வருந்தக்கூடாது; அண்ணனும் தம்பியும் கீரியும் பாம்புமாகிவிட்டார்கள் என்று எண்ணக் கூடாது—என்பதற்காகவே நானே என்னை நாடு கடத்திக்கொண்டேன். நான் நகரிலேயே தங்கியிருந்தால் நீங்கள் அடுத்த நடவடிக்கையாக எதை மேற்கொள்வீர்கள் என்று என்ஞல் கணிக்க முடியவில்லை; ஏன், உங்களுக்கே என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்திருப்பீர்கள். அதனுல்தான் நானே எனக்குத் தீர்ப்புக் கூறிக்கொண்டேன். நான் எங்கிருக்கிறேன்; என்ன செய்து கொண்டிருக்கிறேன். என்பதை அறிய, முயலவேண்டாம். நான் சாகவில்லை என்பதை மட்டும் மனதிலேற்றிக் கொள்ளுங்கள்! அது போதும். டெல்பியின் ஆருடம் பொய் என்பதை மெய்ப்பிப்பதே இப்போது எனது தலையாய வேலை—கடன்! என்னுடைய வெற்றி தங்களுடைய அமைதிக்கு வெற்றி! இந்த இடைக்காலத்தில் அண்ணனுக்கு மகுடம் சூட்டி மகிழும் திருப்பணியில் தாங்கள் ஈடுபட வேண்டும். அண்ணன் கொற்றவன் பீடத்தில் அமர்ந்த பிறகுதான் நான் நாடு திரும்புவது என்று முடிவுசெய்து விட்டேன்.

அரண்மனை வாழ்வில், அரச போகத்தில் திளைத்திருந்த எனக்கு, கிரேக்கத்தில் எழில் வளத்தை காணும் பேறு இப்போதுதான் கிடைத்திருக்கிறது. ஓய்வு நேரங்களில் நாட்டின் பண்டை நிலை கூறும் ஏட்டுச் சுவடிகளைப் படிக்கிறேன். மாளிகையின் அறுசுவை உணவைக் காட்டிலும், மலைப்பகுதிக் கனிகளின் தனிச்சுவை என்னை அதிகமாகக் கவர்ந்திருக்கிறது.

அரண்மனையை விட்டு நான் யாருக்கும் தெரியாமல் கிளம்பினேன், உடன் ஒருவனை அழைத்து வர இருந்தேன். பின் அவனையும் ஒதுக்கிவிட்டேன். என்னருமை வெள்ளைக் குதிரை என்னை இவ்விடத்தில் சேர்ப்பித்துவிட்டு அரண்மனைக்குத் திரும்பிவிட்டது. வந்து சேர்ந்திருக்கக்கூடும். அதற்குக் கடுமையான உழைப்பு! அதன் கால்கள் பல இடங்களில் இடறிவிட்டன. காயங்கள்கூட ஏற்பட்டிருக்கக்கூடும். அரசர்களின் நிலையை உயர்த்துவது குதிரைகள்தான். அதனைக் காத்து வளர்ப்பது நமது கடன்.

தந்தையின் மேலான கவனத்திற்கு இறுதியாக ஒன்று.

அண்ணனுக்கு முடி சூட்டுவிழா முடிந்தவுடன், என் இதயத்திலே பூத்து நிற்கும் எனது தணியாத விருப்பமொன்றை நீங்கள் நிறைவேற்றிவைக்க வேண்டும். காலமும் நேரமும் வரும்போது நான் அதைத் தங்களிடம் தெரிவிக்கிறேன்.

அன்புச்செல்வன்,
பெர்க்ளீஸ்.

இப்படி ஒரு நெடிய முடங்கலைத் தீட்டிக் கொணர்ந்து பலகணி வழியாக கிளிஸ்தெனீசன் படுக்கையறைக்குள் போட்டுவிட்டு ஓடியது ஒரு உருவம். அது பெர்க்ளீசாகத் தானிருக்க வேண்டும்!

மறுநாள் காலை அந்த ஓலை மன்னன் கிளிஸ்தெனீசின் பார்வையில் பட்டது. கடிததத்தின் வாசகங்கள் அவன் இதயத்தைப் புரட்டிப் புரட்டி எடுத்தன. ஆனந்தக் கண்ணீர் வடித்தான். ஓலையை நெஞ்சில் பதித்துப் பெருமூச்சுவிட்டு, 'பெர்க்ளீஸ் இருக்கிருன்! என் மகன் பெர்க்ளீஸ் சாகவில்லை வாழுகிருன்!" என்று கூவினுன்.

பெர்க்ளீஸ் அந்தக் கடிதத்தில் அவனுடைய குதிரையைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தது மன்னனை உருக்கிவிட்டது. லாயத்திற்கு ஓடி அந்தக்குதிரையை ஒருமுறையாவது முத்தமிட்டுவிட வேண்டுமென்று துடித்தான். அரசர்களுக்கு அடிக்கடி மனம் மாறுவதுமுண்டு. நல்லது என்று பட்டதை உடனே பாராட்டி

விட வேண்டும்; கெட்டதை அப்போதே கண்டித்துவிட வேண்டும். ஆண்டாண்டுக் காலமாக அரச குலத்தில் நடைமுறையில் இருந்து வரும் தலையாய விதி இது. கிளிஸ்தெனீஸ் பட்டுச் சால்வையை எடுத்துப் போர்த்திக்கொண்டு கதவைத் திறக்க எழுந்தான். 'தடார்' என்று கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தான் மூத்த மகன் டிராக்கோ! அவன் கண்கள் சிவந்திருந்தன. அளவுக்கு மீறி மதுக் குடித்தவனைப் போல் காணப்பட்டான்.

''டிராக்கோ என்ன இது? ஏன் இப்படி வருகிறாய்?'' — கிளிஸ்தெனீஸ் கேட்டான்.

''நாளையே நான் முடிசூட்டிக் கொள்ள வேண்டும்! டிராக்கோ இனிப் பொறுக்கமாட்டான்! புனிதமான மடாலயத்தின் பெயரால் டெல்பியின் மூலம் இந்த நாட்டில் சதி நடக்கிறது. விடிந்தால் கெல்லாஸ் மண்டலத்திற்கு நான்தான் அதிபதி! ஆமாம் நான்தான் அதிபதி!'' என்றுவீறிட்டெழுந்தான் டிராக்கோ!

''டிராக்கோ! மூடு வாயை! மகுடாபிஷேகம் என்றால் விருந்துச் சாப்பாடா என்ன? மக்கள் சபை இருக்கிறது! ஆய்வு மன்றம் இருக்கிறது! நீதிபதிகள் இருக்கிறார்கள். அவர்களை யெல்லாம் கூட்டிக் கேட்டல்லவா நாள் குறிக்கவேண்டும்!'' என்றான் மன்னன் சற்று ஆத்திரமாக!

''இல்லை! நான் நம்பமாட்டேன். இவர்கள் எல்லாம் உமது கையாட்கள்! பெர்க்ளீசுக்கு வேண்டியவர்கள்!'' என்று உளறினான் டிராக்கோ,

''அறிவு கெட்டவனே! அவனுக்கு ஆலயம் கட்டிப் பூசை செய்! இதோ இருக்கிறது அவன் எழுதிய கடிதம்!'' என்று பெர்க்ளீசின் கடிதத்தை டிராக்கோவின் முகத்தில் எறிந்தான் மன்னன். டிராக்கோ அதை எடுத்துக்கூடப் பார்க்கவில்லை. வேகமாக அறையைவிட்டு வெளியேறி விட்டான். அவன் போகும்போது அவனது சட்டைப் பையிலிருந்து ஒரு சிறு ஓலைச்சுருள் நழுவி விழுந்துவிட்டது. மன்னன் அதை எடுத்துப் பார்த்தான்.

அன்புள்ள நண்பா,

மன்னருக்கு உலகமீது நம்பிக்கை இல்லை. முடியை உன் தம்பிக்குத் தரத்தான் அவருக்கு விருப்பம், கிரேக்கத்தில் டெல்பிக்குள்ள மரியாதையைப் பயன்படுத்தி, டெல்பி குரு மூலம் தம்பிக்கு மணிமுடி என்று ஆருடம் கூறுவதுபோல் நடிக்கச் செய்தவர் உன் தந்தைதான். நீ முந்திக் கொள்! எச்சரிக்கையாயிரு!

உன் ஆருயிர் நண்பர்கள்.


என்று அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தது. யாரோ சில குழப்பவாதிகள் டிராக்கோவை முடுக்கிவிட்டிருக்கிறார்கள் என்று கிளிஸ்தெனீஸ் எண்ணினான். யார் அவர்கள்? ஏன் டெல்பியாக இருக்கக்கூடாது? இதைக் கிளிஸ் தெனீஸ் நம்புவானா?

தமிழகத்துத் திரவியங்கள் கள்ளத்தனமாக அரபிக்கடல் வழியாக ஏரல் கடலுக்கு வந்து அங்கிருந்து தரை மார்க்கமாக காஸ்பியன் கடலுக்குப் போய், காஸ்பியன் கடலிலிருந்து வால்கா, டான் நதிகளின் வழியாக காஸ்பியன் கடலை அடைந்து அங்கிருந்து கிரேக்கத்திற்கு வந்துகொண்டிருக்கின்றன. கிரேக்கத்தின் எல்லைக்கோட்டில் பயங்கரமான இரவில் தமிழ் வியாபாரிகள் திரவியங்களை வியாபாரம் செய்யத் தலைப்பட்டார்கள். தமிழ் நாட்டு முத்துக்களும் பவளங்களும் முன்னைக் காட்டிலும் இப்போது பதின்மடங்கு அதிக விலைக்கு வாங்கப்பட்டன. கிரேக்க மக்கள் பயந்துகொண்டே அவைகளை வாங்கினார்கள்.

ஒரு நாள் இரண்டு வாலிபர்கள் கெல்லாஸின் மலைப் பகுதியில் — இருட்டு நேரத்தில் கள்ள வியாபாரிகளை எதிர்நோக்கியிருந்தார்கள். அவர்கள் திருடர்களைப்போல் பதுங்கிப் பதுங்கி நேரத்தைப் போக்கிக் கொண்டிருந்தார்கள். மடியில் நிறைய நாணயங்கள் இருந்தன, கடலில் காற்று அதிகம் என்று காரணம் கூறிக்கொண்டு விடியப் போகிற நேரத்தில் தமிழ் வியாபாரிகள் அந்த மலையை வந்து அடைந்தனர்.

கிரேக்க வாலிபர்கள் நாணயங்களை அவர்கள் மடியில் கொட்டிவிட்டு இரண்டு முத்துக்களைப் பெற்றுக்கொண்டு ஓடினார்கள். அவர்கள் எதிர்பாராத வகையில் தீப்பந்தமேந்திய ஒரு சிறு சிப்பாய்க் கூட்டம் வழிமறித்தது. ஒருவன் தப்பிவிட்டான், மற்றவன் அகப்பட்டுக் கொண்டான். தப்பி ஓடியவனை இரண்டு சிப்பாய்கள் நெடுந்தூரம் வரை விரட்டிக்கொண்டு போனார்கள். அந்த வாலிபன் கெல்லாஸ் எல்லையின் விளிம்பைக் கடந்து தெசாலி நாட்டு எல்லைக்குள் போய் விட்டான்.

சிப்பாயிடம் அகப்பட்டவன் மடியில் விலையுயர்ந்த தமிழ் ரத்தினம் ஒன்று இருந்தது. அதன் விலை இரண்டாயிரம் வராகன். சாமான்யர்களால் அதுபோன்ற இரத்தினத்தை வாங்க இயலாது. திருட்டுத்தனமாக வந்து கள்ள வியாபாரிகளிடத்தில் அவ்வளவு விலை கொடுத்து வாங்க அந்த வாலிபனுக்கு அவ்வளவு பணம் ஏது? கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவனா? யாரையும் கொலை செய்துவிட்டு அவ்வளவு பெரிய தொகை அபகரித்து வந்துவிட்டானா?



அந்த அழகு வாலிபனை கிளிஸ்தெனீஸ் முன் இழுத்துச் சென்றார்கள். மன்னன் கிளிஸ்தெனீஸ், டிராக்கோ செய்யும் கொடுமைகளை எண்ணி ஆத்திரப்பட்டுக் கொண்டிருந்தான். அதே வேகத்தில் இந்த வாலிபனுக்கும் தீர்ப்பைக் கூறிவிட்டான்! மரண தண்டனை! இருபது வயதைக்கூடத் தாண்டாத இளைஞன்! அவனது ஆசைகளை யெல்லாம் நிர்மூலமாக்

கும் மிகப் பெரிய தண்டனையை கிளிஸ் தெனீஸ் தந்துவிட்டான். வாலிபனின் கண்களில் நீர் பெருகியது. மன்னனிடம் எதையோ கூற வாயெடுத்தான்; அதற்குள் சிப்பாய்கள் அவனை சிறைச்சாலைக்கு இழுத்துப் போய் விட்டார்கள். அவன் கிரேக்க நாட்டின பொதுச் சபை விதித்த தடையுத்தரவை மீறிய முதற் குற்றவாளியாகையால்தான் இவ்வளவுகொடிய தண்டனையை மன்னர் விதித்திருக்கிறார் என்று மக்கள் பேசிக்கொண்டார்கள். பெரியவர்கள் புரியும் பிழைகளுக்குப் புது விளக்கம் கொடுத்து அந்த பிழைகளே பேராண்மை மிக்க தீரச் செயல்கள் என்று மக்களை நம் வைக்கும் அடியார் கூட்டம் கிரேக்கத்திலும் வாழ்ந்திருக்கிறதே!

* * *

பொழுது புலர்ந்தது. முதல் நாள் மாலை இப்படி ஒரு வாலிபனுக்கு மரண தண்டனை கொடுத்திருக்கிறோம் என்ற நினைவுகூட மன்னனுக்கு இல்லை. 'ஞாபகமறதி' மனிதனோடு பிறப்பதில்லை. மனிதன் உண்டாக்கிக் கொள்வதுமில்லை. அழுகின்ற மழலையை அணைக்க முயலும் தாய், அடுப்பிலிருக்கும் பானையை மறந்துவிடுவதில்லையா? மூளையும் இதயமும் ஒன்றியிருக்கும்போது கையும் வாயும் வெறும் எந்திரமாகிவிடுகின்றன. டிராக்கோவைத் திருத்தும் சிந்தனையே கிளிஸ் தெனிசுக்கு மிகப் பெரிய பாரமாக இருந்ததால் காலில் எறும்பு கடித்தது போன்ற இருந்தச் சிறிய சம்பவம் அவன் உள்ளத்தைத் தைக்கவில்லை.

கிளிஸ் தெனீஸ் ஆலோசகர்கள் புடைசூழ அத்தாணி மண்டபத்தில் வீற்றிருந்தான். அப்போது தெசாலியிலிருந்து ஓலை வந்திருப்பதாக வாயில் காப்போன் தெரிவித்தான். ஓலை வந்தது. கிளிஸ் தெனீஸ் அதைப் படித்துவிட்டு, ஏளனமாகச் சிரித்தான். அவையில் கேள்விக்குறி முளைத்தது.

"கேளுங்கள் அவையோரே, தெசாலி இளவரசியை நாம் கைது செய்து வைத்திருக்கிறோமாம்! தெசாலி மன்னர் லைகர்கஸ் ஓலை அனுப்பி இருக்கிறார். வேடிக்கையாக இருக்கிறது! பெண்ணைச் சிறைப் பிடித்து மண்ணைக் காக்க எந்தப் பேடியும் விரும்பமாட்டான்! தூதுவரே, எம்மிடம் இப்படி ஒரு இழிகுணம் இன்றைக்கும் இல்லை என்றைக்கும் வராது என்று உமது மன்னனிடம் தெரிவித்துவிடு" என்று கூறிவிட்டு கிளிஸ் தெனீஸ் சபையைக் கலைத்தான். மன்னனுக்கு அடுக்கடுக்காகத் துன்பங்கள் வருவதை எண்ணி சபை பெருமூச்சு விட்டது!




## புறநானூற்றில்......!

"ஐம்புலன் இன்பந் துய்க்க
அறநெறிக் காதல் வேண்டும்
பைம்புனல் வெள்ளம் போன்ற
பண்புகள் அங்கே வேண்டும்.
கைம்முதல் ஒழுக்கந் தானே.
கற்பெனில் ஆணுக் குந்தான்.
செய்வன திருந்தச் செய்க"
திருக்குறள் இதனைக் கூறும்

"காக்கையின் உள்ளம் வாய்ந்தால்
கருணையில் எண்ணம் தோய்ந்தால்
ஆக்கமும் சிதையா" தென்ற
அறிவுரை குறளில் உண்டு

நோக்கமும் அவ்வா றாகி
நோயெனும் பசியைத் தீர்த்து
பாக்களில் பொறிக்கப் பெற்ற
பண்புகள் மறந்தான் பேகன்.

கெழுமிய அன்பைப் பெய்து
கீர்த்தியை நனிபெற் றுலும்
விழுமிய ஒழுக்கங் கெட்டு
விலகியே சென்றான் சற்று.
உழுவலன் புடையோ ரெல்லாம்
உத்தமன் செயலைக் கண்டு
கொழுநனைப் பிரிந்தே வாடும்
கோதையால் உருகிப் போனார்.

ஈகை யால் இசையைப் பெற்றான்;
இல்லையென் றுமல் ஈந்தான்.
தோகையின் ஆடல் கண்டு
தூயபொன் னுடை தந்தான்,
ஆகையால் பேகன் உள்ளம்
அன்பெனும் வெள்ளம் என்று
பாகையும் வெல்லும் வண்ணம்
பாடினோர் வியப்பில் ஆழ்ந்தார்

சீறியாழ் கையில் ஏந்தி
செவ்வழிப் பண்ணும் பாடி
மாறிடா மையல் கொண்டு
வந்திடும் புலவோ ரெல்லாம்
சீறினார் அங்கே வந்து
செய்தியைச் செவியில் ஏற்று.
கூறினார் பேகன் முன்னே
குறள்தரும் அறத்துப் பாலை.

மறுமையின் பலனை நோக்கி
வழங்குவார் வணிகர் தானே.
வறுமையின் கொடுமை நீங்க
வழங்கினான் வள்ளல் பேகன்.
சிறுமையும் செய்வான் கொல்லோ?
சிந்திக்கச் செய்வோ மென்று
பெறுநராய் அங்கே வந்த
பரணரும் பிறரும் சேர்ந்தார்.

"மனத்துக்கண் மாசில் லாத,
மனைத்தக்க, மாண்புள் ளாளை
சினம்பகை யெதுவும் இன்றி
சிறப்புடன் வாழச்செய்க.
இனப்புகழ் கெடக்கூடாது.
இசைபட வாழ்வாய்!" என்று
தினம்ஒரு புலவோர் சொல்ல
திருந்தினான் வள்ளல் பேகன்.

சங்கத்துப் புறநா னூற்றில்
சந்தித்த பேகன் வாழ்வை
இங்குள்ள யாரும் கற்று
எய்துக மேன்மை வாழ்வு
துங்கம்சேர் ஒழுக்கம் பேண
தொன்மைசேர் மானம் பூண
செங்கனிச் சாற்றைப் போலும்
செய்யுளைக் கற்போம் மேலும்.

—சி. விநாயகமூர்த்தி.



# பெற்றோர் விருப்பப்படி

அழகரசன்.

"மலர் மணம்" பத்திரிகையின் ஆபீசுக் கட்டிடத்திலுள்ள தன் அறையில், அன்றையத் தபால்களைப் பார்வையிட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தான் சுந்தரம். புதுப் பத்திரிகையாகிய 'மலர் மண'த்தில் நவீன அம்சங்களும் இருக்கத்தான் செய்தன. அவற்றில் பெண்களுக்காக ஏற்படுத்தப்பட்ட "அரசைக் கேளுங்கள்!" என்ற பகுதி தலை சிறந்து விளங்கியது. தங்கள் வாழ்க்கையைப் பாதிக்கும் எந்த விஷயத்தைக் குறித்தும் பெண் நேயர்கள் அப்பகுதிக்கு எழுதிக் கேட்கலாம். அந்தப் பகுதிக்கு ஆசிரியர் தான் சுந்தரம். நியாயமாக பெண்கள் பகுதிக்கு ஒரு அசல் பெண்ணையே ஆசிரியராகப் போடவேண்டும் என்பதை, "மலர் மணத்"தின் ஆசிரியர் உணர்ந்திருந்தார். ஆனால் ஒரு பெண்ணுக்குத் தம் ஆபீசில் இடம் கொடுக்க அவர் மனம் ஒப்பவில்லை—ஏன் துணியவில்லை. ஆகவே சுந்தரமே "சரசா"வாக மாறி அப்பகுதியை நடத்திவந்தான். இதே காரணத்தால் அவனுடைய உத்தியோகம் எத்தகையது என்று யாருக்கும் தெரியக் காரணமில்லை. யாராவது அவனுடைய வேலையைப் பற்றிக் கேட்டால் "அஸோஸியேட் எடிட்டர்" என்று பெருமையாகச் சொல்லிக்கொள்வான் சுந்தரம். கேவலம் ஒரு பெண்ணின் பெயரைப் பூண்டு, ஒரு பெண்ணின் பகுதிக்கு ஆசிரியராக இருப்பது அவனுக்கு அவமானமாக இருந்தது.

அன்றென்னவோ "சரசா" என்ற சுந்தரத்திற்குத் தன்தொழிலில் வழக்கத்தைக் காட்டிலும் அதிகமாக அலுப்புத்தட்டியிருந்தது. தனக்குள் கொந்தளிக்கும் இலக்கிய உணர்ச்சிகளைப் பார்த்து தனக்கு ஒரு தலைமையாசிரியர் பதவி கொடுப்பதைவிட்டு பெண்களின் கேள்விகளுக்குப் பதில் எழுதும் அர்ப்பபதவி கொடுத்திருந்தது அவன் மனதை அல்லும் பகலும் வாட்டி வதைத்தது. அதுவும் அந்தப் பெண் நேயர்கள் கேட்கும் கேள்விகளோ! அப்பப்பா! சகல சாஸ்திரங்களையும் கரைத்துக் குடித்தவனுக்கும் அவைகளுக்குப் பதிலெழுதுவது கஷ்டமென்றால்வெறும் "பி.ஏ."யான 'சரசா'வுக்குக் கேட்க வேண்டுமா?

மிகுந்த அலுப்புடன் ஒவ்வொரு கடிதமாகப் பார்வையிட்டு வந்தான். "நான் நாளுக்கு நாள் தடித்து வருகிறேன்; பார்ப்பவர் நகைக்கும்படி இருக்கிறது என் சுற்றளவு. சீக்கிரத்தில் இளைக்க ஏதாவது வழி சொல்லிக் கொடுக்க வேண்டும்" என்று கேட்டிருந்தாள் ஒரு "பாவை!" "சுவரில் போய் முட்டிக்கொள்!" என்று முணுமுணுத்தது ஆசிரியரின் வாய். ஆனால் அப்படியெல்லாம் எழுதி சந்தாதாரை விரோதித்துக் கொண்டால், அவன் வேலையே போய்விடுமே! பல்லைக் கடித்துக் கொண்டு, பொறுமையாக ஒவ்வொன்றாகப் பார்த்துப் பதிலெழுதிக் கொண்டிருந்தான்.

கடைசியாகக்காணப்பட்ட ஒருநீல நிறக் கவர் அவனுக்குச் சிறிதுஊக்க மூட்டியது. தபால்காரன் பையில் பிரயாணம் செய்யும் அக்கவரிடமிருந்து ஒருவித நறுமணம் பரவியதைக் கண்ட சுந்தரம், ஆவலுடன் அதைப் பிரித்தான். மூத்து முத்தான எழுத்துக்களில்.

"சரசா" அவர்களுக்கு.

கண்டதும் காதல் என்று சொல்வார்களே, அது என் விஷயத்தில் நிச்சயமாகிவிட்டது. ஆனால் என் அன்புக்குப் பாத்திரமானவர் மிகுந்த 'சங்கோஜி'யாகக் காணப்படுகிறார். பெண்ணான நான் வலியப்போய் அவருடன் எப்படிப் பேச்சுக்கொடுப்பது? தயவுசெய்து அவரைப் பேச வைக்க ஒரு உபாயம் சொல்ல வேண்டும்.

இப்படிக்குத் தங்கள் நன்றியுள்ள

சுந்தரி என்று எழுதப்பட்டிருந்தது. பிரத்தியேக பதில்களுக்கு அவசியமான தபால் தலையை அடக்கம் செய்து ஒரு தபால்பெட்டி நம்பரையும் விலாசமாகக் கொடுத்திருந்தாள் "சுந்தரி".

சுந்தரி! என்ன அழகான பெயர்! அப்பெயரைப் பார்த்ததும், அவன் மனம் சட்டென்று அந்த மற்றொரு சுந்தரியை நினைத்தது. அவள்பெயர் சுந்தரியா இல்லையா என்று அவனுக்குத் தெரியாது. ஆனால் உருவத்தில் அவள் சுந்தரி என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். அவள் தான் அவன் குடியிருந்த வீட்டிற்குப் பக்கத்து வீட்டில் குடியிருந்த பெண். அவளுடன் அவன் பேச எத்தனையோ தடவை முயன்றாலும், அவனுடைய இயற்கையான சங்கோஜம் அவனைப் பிடுங்கித் தின்றது.

மிகுந்த கஷ்டத்துடன் அந்த சுந்தரியிடமிருந்து கடித சுந்தரியிடம் கவனத்தைக்கொண்டுவந்தான் சுந்தரம். சிறிது நேரம் பேனாவின் மூடியை கடித்தவண்ணம் யோசனையில் மூழ்கியிருந்தான். பிறகு "சுந்தரி அவர்களுக்கு அவர் கண்ணில் படும்படியாக தங்கள் பொருள் எதையேனும் தவறவிடுங்கள். அப்பொழுது இருவரும் பேசச் சந்தர்ப்பம் ஏற்படும்.

இப்படிக்கு,
"சரசா"

என்று எழுதி தபாலில் சேர்த்துவிட்டான். அவன் மனம் மீண்டும் பக்கத்து வீட்டு சுந்தரியிடம் சென்றது. "அவள் மாத்திரம் என் கண்ணெதிரில் எதையாவது தவறவிடட்டும்! எப்படியும் பேசித்தீர்த்து விடுவேன்; என்று ஏங்கினான்.

அவன் ஏங்கி எதிர்பார்த்த அந்தச் சந்தர்ப்பம் அவனுக்குச் சீக்கிரத்திலேயே கிட்டியது. இரண்டு நாளைக்குப் பிறகு, அவன் ஆபீசுக்குப் புறப்படும்பொழுது எங்கிருந்தோ திரும்பி வந்துகொண்டிருந்த அவன் 'சுந்தரி" பக்கத்து வீட்டு சுந்தரிதான்! தன் கைப்பையைக் கீழே தவறவிட்டாள். சட்டென அதை எடுக்கக் குனிந்தான் சுந்தரம். அம்மாதிரி சந்தர்ப்பம் வாய்த்தால் பேசிவிட வேண்டும் என்று முன் கூட்டியே யோசித்து வைத்திருந்தாலும், வாயிலிருந்து ஒரு வார்த்தையும் வெளிவரவில்லை. மௌனமாக அவளிடம் பையை நீட்டினான். அவளும் "நன்றி" என்று சொல்லி பையுடன் வீட்டினுள் நுழைந்துவிட்டாள். அப்-

போதுதான் ஒன்றுமே பேசாமல், தான் மடத்தனமாக நின்றுவிட்டதை உணர்ந்தான் சுந்தரம். அவனுக்குத் தன் கோழைத்தனத்தை நினைத்து அவன் மீதே ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

ஆனால் அன்றிலிருந்து அவர்களிருவருடைய நிலைமையில் ஒரு மாறுதல் ஏற்படத்தான் செய்தது. ஒருவருடன் ஒருவர் பேசும் அளவுக்குத் தைரியம் ஏற்படாவிட்டாலும், பார்க்கும் பொழுதெல்லாம் இருவர் முகங்களும் மலரும். இருவரும் புன்னகை புரிவார்கள். இருவர் மனத்திலும் காதல் அரும்பி மலர்ந்தது. இவனைப் பார்த்ததும், 'சுந்தரி, கன்னங்கள் சிவக்க ஒரு மோகனப் புன்னகை புரிந்துவிட்டுச் செல்வாள். இவனோ கட்டுண்ட நாகம்போல் நின்றுவிட்டு, அவள் போனபிறகு பேசும் சக்தியடைவான்! அவ்வப்போது அவன் மனம் கடித "சுந்தரியை"எண்ணும். அவள் விஷயத்தில் அவன் யோசனை பலித்துப் பலனளித்ததோ என்னவோ?

விஷயங்கள் இவ்வாறிருக்கையில் தான், அவன் கோட்டைகளைத் தகர்த்தெரியும் வண்ணம் அவன் தந்தையிடமிருந்து பேரிடி போன்ற ஒரு கடிதம் வந்தது. தன் பிள்ளைக்கு எல்லா விதத்திலும் பொருத்தமான ஒரு பெண்ணைப் பார்த்து "நிச்சயம்" செய்திருப்பதாயும் ஒரு வாரத்தில் ஊருக்குப் புறப்பட்டு வரும்படியும் எழுதியிருந்தார்.

"இந்தக்காலத்து அதிகப்பிரசங்கிகள்போல காதல் கீதல் என்றும், பெண்ணைப் பார்த்து பேச வேண்டும் அப்படி இப்படி என்றும் வீண் வம்பு செய்ய மாட்டாய் என்று நம்புகிறேன். உன் சுகத்திலும் இன்பத்திலும் எங்களுக்கு அக்கறையுண்டு என்பதை நினைவில் வைத்துக்கொள். லீவுக்கு எழுதிப்போட்டுவிட்டு ஊருக்கு 'வா' என்றும் எழுதியிருந்தார் அவன் தந்தை. கடிதத்தைப் பார்த்ததும் ஸ்தம்பித்து உட்கார்ந்துவிட்டான் சுந்தரம், தன் சுந்தரியை கைவிடுவதா? தந்தை சொல் தட்டுவதா? அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. எரிமலையே தன் தலையில் புரண்டு விழுந்த மாதிரி இருந்தது. தந்தையின் கடிதத்திற்கு அன்று அவனல் ஒருவித பதிலும் எழுத முடியவில்லை.


மறுநாள் தபால்களைப் பார்வையிடும் பொழுது மறுபடியும் 'சரசா'' அவர்கள் மலர் மணம் ஆபிஸ் என்று விலாசமிட்ட, நறுமணம் கமழ்ந்த நீல நிறக் கவர் அவன் கண்ணில் பட்டது இத்தனை நாளும் எழுதாத சுந்தரி என்ன எழுதியிருக்கிருளோ என்று அவசரமாக அக் கடிதத்தையே முதலில் பிரித்தான். முத்துக் கோர்வையான எழுத்துக்களில்

"சரசா" அவர்களுக்கு

தங்கள் யோசனை பலனளித்தது-ஆகையால்தான் அடுத்து தங்களுக்கு எழுதச் சந்தர்ப்பம் நேரவில்லை ஆனல் இப்போது மறுபடியும் பெரிய சங்கடத்தில் மாட்டிக்கொண்டிருக்கிறேன். என் தந்தை எனக்கு விவாகம் நிச்சயித்திருப்பதாயும் என் பாட்டியுடன் உடனே புறப்பட்டு வரவேண்டுமென்றும் எழுதியிருக்கிருர். நீங்களே சொல்லுங்கள். மனத்தால் ஒருவரை நினைத்த பின் மற்ருெருவரை மணத்தல் பாவமன்ருே? இந்தச் சந்தர்ப்பத்தில் நான் என்ன செய்வது? தந்தைக்குக் கீழ் படிந்து, விதிக்குத் தலை வணங்குவதா? அல்லது மனத்தால் நினைத்தவரையே தைரியமாக மணந்து பெற்ருேரையும் உற்ருேரையும் பகைத்துக்கொள்வதா? எனக்கு ஒன்றுமே தெரியவில்லை. தயவு செய்து யோசித்துப் பதிலெழுதுமாறு வேண்டுறேன். அன்புள்ள "சுந்தரி" என்று எழுதப்பட்டிருந்தது.

ஆச்சரியத்தில் மூழ்கியவனும் உட்கார்ந்துவிட்டான் சுந்தரம். தனக்கும் இந்த ஊர் பெயர் தெரியாத கடித சுந்தரிக்கும் ஏதோ பூர்வஜென்மப் பிணைப்பு இருக்க வேண்டும். இல்லாவிடில் இப்படி ஒரே மாதிரியாக இருவர் விதியும் ஒரே பாதையில் செல்லுமா? தீர்க்காலோசனை செய்தான் சுந்தரம், அவன் மனத்திரையில் ஒரு தீர்மானம் உருவாயிற்று "சுந்தரிக்கு என்ன பதில் கொடுக்கிருேமோ, அதையே வாழ்க்கையிலும் கடைப்பிடிக்கத் தீர்மானித்தான். மணிக்கணக்கில் யோசனை செய்த பிறகு. 'சுந்தரி அவர்களுக்கு நீண்ட ஆலோசனை செய்துதான் எழுதுகிறேன். நீங்கள் தந்தைக்குக் கீழ்படிவதே நலம். பெற்ருேர் எப்பொழுதும் குழந்தைகளின் நலத்தை விரும்புவரேயன்றி கெடுதல் ஒரு பொழுதும் எண்ணமாட்டார்கள். உங்கள் மண வாழ்க்கை சந்தோஷமாக இருக்கவேண்டும் என்று இறைவனை வேண்டுகிறேன்.

இப்படிக்கு.
"சரசா"



கடிதத்தை உறையிலிடும் பொழுது அவன் கண்களில் நீர்த் துளிர்த்தது. அக்கடிதத்துடன் தன் யௌவனக் கனவுகளையும் ஆசைகளையும் சேர்த்து உறையிலிட்டு விட்டதாக அவனுக்கு ஒரு பிரமை உண்டாயிற்று. அதே தபாலில் தன் தந்தைக்கும் தன் சம்மதத்தைத் தெரிவித்துக் கடிதம் எழுதிப் போட்டான்.

இரயிலில் போகும்போதும் பக்கத்து வீட்டுச் சுந்தரியின் எண்ணமாகவே இருந்தது அவனுக்கு. மனத்தைக் கடினப் படுத்திக்கொண்டு கவனத்தை வேறு விஷயங்களில்

திருப்ப முயற்சி செய்தான். ஊருக்குப் போய்ச் சேர்ந்த சுந்தரம் உற்சாகக் குறைவாகவே காணப்பட்டான்.

விடிந்தால் முகூர்த்தம். இரவு முழுவதும் தூக்கமில்லாமலேயே கழித்தான் சுந்தரம். விடிந்தது. மங்கள வாத்தியங்கள் முழங்கின. மாலை மாற்றும் சமயம் மாலையைப் பெண்ணின் கழுத்தில் போடும் பொழுது முதன் முறையாக மணப் பெண்ணைக் கண்ணுற்ருன் சுந்தரம். தன்னையும் மீறி நீயா! என்று கூவி விட்டான். அவள் முகத்திலும் ஆச்சரியம் தோன்றியது. எனினும் பெண்களுக்கு இயற்கையான அடக்கத்துடன் அவள் வாய் திறந்துப் பேச வில்லை. ஆனல் அவள் கண்கள் பேசின. அவன் மாலையிட்டது வேறு யாரையுமல்ல அவன் மனத்தைக் கவர்ந்த பக்கத்து வீட்டுச் சுந்தரி தான்! அந்த வினாடியிலிருந்து கல்யாண மாப்பிள்ளையிடம் ஓர் அபூர்வ மாறுதல் ஏற்பட்டு முகத்திலும் மகிழ்ச்சி பொங்கியது. உள்ளமோ ஆனந்தத் தாண்டவமாடியது.

விவாகமான பின் சுந்தரமும் அவன் மனைவி சுசீலாவும் (மாஜி பக்கத்து வீட்டு சுந்தரி) முதன் முறையாகத் தனித்துக் கூடிப்பேசிச் சிரிக்கும் இன்ப நாள் வந்தது பேச்சு வாக்கில் சுந்தரம் "சுசீலா! நாம் ஒன்று சேர்ந்து சந்திப்போம் என்று எண்ணவே இல்லை. எப்படியோ நம் மனோதம் நிறைவேறியது. பாவம் சுந்தரி! அவளும் இப்படியே சந்தோஷமடைந்திருப்பாளோ? என்னவோ யார் கண்டது. என்ருன். அவள் சட்டென பொறுமையுடன் யார் அந்த சுந்தரி? ரொம்ப ரொம்ப உருக்கமாய்ப் பேசி மாய்ந்து போகிறீர்களே? அவள் எப்படி யிருப்பாள்? அவள் எங்கேயிருக்கிருள் என்று கேள்விமேல் கேள்வியாகப் பொழிந்து தள்ளிஞள். அது

## விற்பனையாளர்களுக்கு

விற்பனையாளர்கள் அனைவருக்கும் ஆ/ஸ்டு மாத பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. விற்பனையாளர்கள் தங்கள் பாக்கித்தொகை முழுவதையும் அனுப்பி வைத்து ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

உரிமையாளர்,
'காஞ்சி'

ஒரு சின்ன கதை சொல்கிறேன் சற்றுப் பொறு. இதோ வருகிறேன்! என்று சொல்லி உள்ளே எழுந்து சென்ருன். அந்த இரண்டு நீலக்கவர்களை மாத்திரம், ஏனோ பெட்டியில் பத்திரப் படுத்தியிருந்தான் சுந்தரம். இப்பொழுது பெட்டியைத் திறந்து கையில் இரு கடிதங்களையும் எடுத்துக்கொண்டு சுசீலாவிடம் வந்தான்

அவற்றைக் கணணுற்றவுடன் சுசீலா பாய்ந்து கடிதங்களைப் பிடுங்கிக்கொண்டு இவை எப்படி உங்களுக்கு அகப்பட்டன? நான் எழுதிய கடிதங்களல்லவா இவை? என்ருள். என்ன...! இது நீ எழுதினுயா? அப்படியானுல் நீயா சுந்தரி என்ருன் சுந்தரம்.

ஆமாம்! நானேதான் சுந்தரி! அதிருக்கட்டும். இந்தக் கடிதங்கள் சரசாவிடமல்லவா, இருக்கவேண்டும்? சரசாவைத் தெரியுமா உங்களுக்கு? என்று கேட்டாள் சுசீலா.

அட ராமா! நானேதான் அந்த சாட்சாத் சரசா! என்ருன் சுந்தரம்.

அவன் மனைவியின் முகத்தில் ஈயாடவில்லை!

★

# குறிஞ்சிக் கூத்து!

முக்கோணக் குறிஞ்சிநிலம் மூத்த அன்னை
முதிர்நாக ரிகத்தொட்டில் புணர்ச்சிப் பண்ணை
மிக்கோர்க்கு மிளிருவமை; மேதை நெஞ்சின்
மெருகார்ந்த திருப்பண்பிற் கெல்லை; சான்ருேர்
முக்காலும் விழைபெருமைத் தோற்றம்; முன்னை
முதற்காதல் முகிழ்த்தநிலம்; குறளின் ஆற்றல்
அக்கால எகுபதியர் பிரமித் ஆ[illegible]க
அமைப்புக்கு முதற்றிட்ட[illegible]; அமைதிப் பாட்டே!

மலைமேனி வளர்க்காடு மயிலின் வீடு
மருள்மான்கள் விளையாடும் அழகின் கூடு!
குலைவாழை தலைநாணக் கூடும் மான்கள்!
குடைபோல விரிகூட்டில் கொட்டும் தேன்கள்!
அலைமேனி அருவிமலர் அழகின் வான்வில்!
அதனேரம் மலர்ப்பண்ணை அருளின் கோவில்!
சிலைமீது பசுந்தோகை சிரிப்பின் கூத்து!
சி[illegible]ருக தமிழின்பம் செழிக்கும் குன்றே!

கழைபோங்கி நிலம் நோக்கும் காந்தள் பூக்கும்!
கருங்கல்லைப் புதராடை மூடும்; ஆடும்!
வழையோங்கிக் குலைதேக்கும் வாழ்க்கை காட்டும்
வளர்முல்லைக் கொடிபூக்கும் வாழ்த்தும் வண்டு.
மழையோங்கி இருள்காட்டும் மூப்பைப் போலே!
முதிர்தாடி தளர் ஆடு மேயும்; பாயும்!
குழையோங்கி மரம்பூக்கும்! கூதிர் காலக்
குளிரோங்கக் குறிஞ்சிமலர் கூத்தைச் செய்யும்!

செங்குழுநீர் சிரித்தாடும் சுனையின் சேற்றுச்
சிறுதவளை காதலிக்கும்; செம்போத் தூடும்!
பொங்கழகுப் புனமயில்கள் பூத்துக் கூடும்
புதுக்குவளை கண்ணிமைக்கும்! காந்தள் வண்டின்
வங்கியத்தில் மெய்சிலிர்க்கும்! வளமார் குன்றின்
வளராடு களாப்பூவின் சுவையைப் பார்க்கும்!
இங்கியற்கை புரிசெங்கோல் எழிலின் கூத்தாம்
எழுச்சிவளர் பேரின்ப இனிமை யூற்றும்!

—புலவர் தி. நா. அறிவுஒளி

# போரென்னும் ஒரு பகைவன்

இரண்டு எழுத்துக்களால் புனையப் பெற்ற ஓர் அழகிய சிறு சொல்லே, போர். அச்சொல், பலருக்கு அச்சத்தையும் — சிலருக்கு ஆவலையும் கிளறிவிட்டிருக்கிறது. அநேக சந்தர்ப்பங்களில் பலருக்குப் பீதியையும் சிலருக்குப் புன்னகையையும் அளித்திருக்கிறது. ஒரு குழுவிற்குத் தென்றலாகவும், அதன் பகைக் குழுவிற்குப் புயலாகவும் காட்சியளித்திருக்கிறது.

போர், மனிதனுக்கு மட்டுமல்ல மனிதனுக்கும் மிருகங்களுக்கும் மட்டுமேகூட அல்ல, மிருகங்களுக்கும் மிருகங்களுக்கும் இடையே கூட நடந்திருக்கின்றது. நெருப்பை வளர்க்க நெய் எப்படி சாதனமாக இருக்கின்றதோ, அப்படியே பூசலையும் போரையும் பசி வளர்த்தது. மனிதனைப் பொறுத்தமட்டில்,

பசிக்காக ஒரு போர்
காதலுக்காக ஒருபோர்
வீரத்திற்காக ஒரு போர்
புகழுக்காக ஒரு போர்
ஏகாதிபத்திய ஆசைக்காக ஒரு போர்
பொருளாதாரக் குழப்பத்திற்காக ஒரு போர்

என்று பல்வகை போர்களை பலமுறை பலத்த தன்மையில் செய்திருக்கிறான் என்று சரித்திரம் கூறுகிறது.

போரின் காரணமாக மனிதன் மண்ணில் கொட்டிய இரத்தத்தின் அளவு ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்ட ஒன்றாகும். உலகத்திற்குப் பேசவாயிருந்தால், எத்தனையெத்தனை விசித்திரமானதும், விபரீதமானதுமான சங்கதிகள் வெளிப்பட்டிருக்குமோ—யார் கண்டது? இதில் உள்ள வேடிக்கை என்னவென்றால், எந்தெந்தக் காரணங்களை முன்னிட்டுப் போர்கள் மூண்டனவோ, அந்தப் பிரச்னைகள் இன்றளவும் பூண்டோடு அழியவில்லை. எனவே, போரும் ஒழியவில்லை!

போர் ஓர் நிழற்படம் என்றால், சரித்திர ஏடு ஓர் வெண்திரை என்றும் கூறலாம். மனிதப் பூண்டின் இறந்தகால நிகழ்ச்சிகளை, சரித்திரம் என்ற திரை நமக்கு நினைவு படுத்துகிறது. மூதாதையர்களின் பேதைமையை எண்ணி எள்ளாடிய மனிதன், அடுத்த நிமிடத்திலேயே தம் மூதாதையர் செய்த அதே தவறைத்தானும் இழைத்துவிடுகிறான். இல்லாவிட்டால், உலகத்தில் போர் இன்றுவரை பிழைத்துக் கொண்டிருக்குமா?

காதல், போரை வளர்த்த பல சக்திகளில் ஒன்று போரை மூளச் செய்து குற்றத்தை இழைத்த அதே காதல், எதனாலும் நிறுத்த முடியாத பல போர்களை நிறுத்திய பெருமைக்கும் சொந்தக்காரனாக விளங்குகின்றது எனில் மிகையாகாது. இரக்கமில்லாத எண்ணற்ற இதயங்களை இளக்கிய பெருமை காதலுக்கு இல்லை என்று யார்தான் மறுக்க இயலும்? பிருத்விராஜனுக்கும் ஜெயச்சந்திரனுக்கும் இடையே மூண்ட போருக்கும் காதல்தானே முக்கியக் காரணம்? போர் என்ற புலவனால் பாடப்பெற்ற காதல் இலக்கியங்கள் பலப்பல. ஒரு நாணயத்திற்கு இரண்டு முகப்புக்கள் இருப்பதைப்போல, உலக இலக்கியத்திற்கும் போரும்-காதலும் இரண்டு பக்கங்களாகும்.

போரை வளர்த்த மற்றொரு மகத்தான சக்தி, வீரமாகும். தினவெடுத்தத் தோள்கள், போரை ஓர் மருந்து என்று கருதியதுண்டு. வீரத்திற்கு மெருகு கொடுக்கும் ஓர் இயந்திரம் போர் எனில் அஃது தவறாகாது எனலாம். போர் எத்தனையோ வீரர்களை சிம்மாசனம் ஏற்றி இருக்கிறது. எத்தனையோ வீரர்களை சிம்மாசனத்தினின்றும் குப்புற உருட்டியும் தள்ளி இருக்கிறது. போர் ஓர் பல்கலைக் கழகமென்றும் புகழ்ச்சியாக சொல்லிக் கொள்ளலாம். எத்தனையோ வீரர்களுக்கு அது பயிற்சியும் பட்டமும் அளித்து உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்துள்ளது. நெபபோலியன், கிளைவ், டியூப்ளே, இமயத்தில் கொடியேற்றிய வீரன் பாண்டியன் நெடுஞ்செழியன் ஆகியோர் அத்தகைய சிறப்புப் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர்களுள் ஓர் சிலர். வீரர்களின் வலிவின் தராதரத்தைக் கூட போர் என்ற தராசு நிறுத்துக் கூறியுள்ளது.

போர் புகழை வாங்கித் தந்தது போல, புகழும் போரை மூட்டி விட்டிருக்கிறது. ஒரு மன்னனுடைய புகழ் உயர்த்துப் பேசிப் புகழப்பட புகழப்பட, மற்றோர் மன்னனுடைய மனம் பொறாமைப்புயலால் தாக்கப்பட்டது. புகழும் பொறாமையும் ஒன்றோடொன்று மோதிப் போரிட்டு, மன்னர்களின் மண்டை ஓடுகளை சுக்குநூறாக நொறுக்கித் தள்ளியிருக்கின்றன. போரை மூளச் செய்த வேறோர் சக்தி, ஆதிக்க ஆசையாகும். பரந்த பூபாகத்தை ஆள வேண்டும் என்று தனி மனிதனின் ஆசை, பல போர்களுக்குக் காரணமாக ஆயிற்று. அப்படிப்பட்ட ஆசையின் காரணமாகப் போரை துவக்கிவைத்தப் பெருந்தகைகள், பெருவீரன் அலெக்சாண்டரும், இட்லரும் என்பர்.

பசி, காதல், வீரம், புகழ், ஆசை என்ற இவை மட்டுமே போரை வளர்த்தவை என்று கூறுவது தவறு. சென்ற நூற்றாண்டு உலக வரலாற்றை எடுத்து ஆராய்ந்தால், பொருளாதார ஏற்றத் தாழ்வுகூட போரை மூட்டிவிடும் வலிவு உள்ளது என்பதை நாம் உணர்வோம். ஒருநாடு வளர்பெற்றும், மற்றோர் நாடு எல்லா வகையிலும் வளர்ச்சி குன்றி வளமற்றும் இருக்குமேயானால், உலகத்தில் அன்பும் அமைதியும் நீடித்து நிலவாது. சந்தேகம் ஒரு பயங்கரமான நண்பன். அத்தகைய சந்தேகத்தினூடே வாழ்வதுவும், போருக்கு வித்திடுவதாகும்.

மனித வர்க்கம் பல வகையான காரணங்கள் காரணமாக எத்தனையோ போர்களை நிகழ்த்தி விட்டதாயினும், போரின் பயங்கரத்தை உணர்ந்தும் விளக்கி ஒதுக்க முடியாத நிலையில் உள்ளது. போருக்கும் போர் காரணங்கள் மட்டுமல்ல, போர் முறையும் மாறி விட்டது. கல்லும், வில்லும்—வாளும் வேலும், இன்று பீரங்கி, அணுகுண்டு என்ற அளவுக்கு வளர்ச்சி அடைந்துவிட்டன. அதாவது, போர் என்ற பண்பு குன்றாது அதே அளவில் நிற்க விஞ்ஞானம் நல்ல வளர்ச்சி அடைந்துவிட்டது. விஞ்ஞானத்தின் வளர்ச்சி போரின் ஆயுளை நீடிக்கச்செய்யும் என்று கருதப்படலாம். அது சரியோ — தவறோ. வருங்காலந்தான் தீர்ப்புக் கூற வேண்டும்.

—தெ. பா. சீதாராமன்.

# கவிஞன் பைரன்

'பைரன் பிரபு' என்ற பரம்பரைப் பட்டத்தைத் தனது பத்தாவது வயதில் ஏற்றுக் கொண்ட கவிஞனது இயற்பெயர் 'ஜார்ஜ் கார் டன் பைரன்' என்பதாகும். ஆரோ, மற்றும் டிரினிடி கல்லூரிகளில் பயின்ற அவன் 1805-ல் தனது பதினேழாவது வயதில் — 'வீண்பொழுது' என்ற கவிதைத் தொகுப்பை வெளியிட்டான். 'மந்தமான' அந்தக் கவிதைத் தொகுப்பை 'எடின்டர் மதிப்புரை' என்ற ஏடு தீவிரமாக விமர்சனம் செய்தது. அதைக் கண்ணுற்ற பைரன் வெகுண்டான்; காரசாரமான ஒரு கேலிக் கட்டுரையை எழுதினான். 'ஆங்கிலப் பாணரும் ஸ்காட்லாந்து விமர்சகரும்'' என்ற அந்தக்கட்டுரைதான் அவனை ஒளிஉமிழும் உலகிற்குக் கொண்டுவந்து அறிமுகப் படுத்தியது. பின்னர் சில வெளிநாடுகளைச் சுற்றிவிட்டுவந்து அவன் நிரம்ப கவிதைகளை வெளியிட்டான். 'உதயசூரிய'னின் ஒளிக்கதிர்கள்போல அவன் புகழ் பரவத் தொடங்கியது.

பைரன் தனது இருபத்தேழாவது வயதில் — 1815ல் மில்பாங்க் என்ற மங்கையை மணந்தான். அவள் அவனுடன் ஓராண்டிற்குமேல் வாழவில்லை; பிரிந்துவிட்டாள். ஏன் பிரிந்துவிட்டாள் என்பதை இதுவரை யாரும் விளக்கியதாகத் தெரியவில்லை. மனைவி பிரிந்துவிட்ட நிலையில் அந்த இளங்கவிஞன் ஒழுக்கத்தின் வரம்புகளை 'பச்சையாக' மீறத்தொடங்கினான். இங்கிலாந்து நாட்டினர் அவனைத் தீவிரமாகக் கண்டித்தனர். அவர்கள் ஒழுக்கவிதிகளை 'இறுக்கிய'போது, ''இங்கிலாந்து மக்கள் கபடவேடதாரிகள்'' என்று பழித்துவிட்டு அவன் இங்கிலாந்தைவிட்டு வெளியேறி, சுவிட்சர்லாந்து நாட்டில் சின்னாள் தங்கிவிட்டு 'வெனிசு' நகரில் குடியேறினான்.

பைரன் ''சில்டெ அரால்டின் புனிதப் பயணம்'' என்ற தலைப்பில் நான்கு காண்டங்களை எழுதினான். அவற்றில் அவன் சுற்றித்திரிந்த நாடுகளின் இயற்கையெழில் மட்டுமின்றி, அவனது உணர்வுகளும் தனிப்பண்புகளும்கூட வெளிப்படுத்தப்படுகின்றன.

'சில்லான் கைதி', 'லாரா', முதலிய கவிதைகளும், மேன்ஃபிரட்' 'கேய்ன்' முதலிய நாடகங்களும் அவனது படைப்புகள். 'தி லிபரல்' என்ற இதழில் துணையாசிரியனாகவும் பைரன் சின்னாள் பணியாற்றியிருக்கிறான். அவன் 1819ல் 'டான் சுவான்' என்ற காவியத்தை எழுதத் தொடங்கினான். அந்தக் காவியம் முடியவில்லை; அதற்குள் கவிஞனின் வாழ்வு முடிந்துவிட்டது.

பைரன் தனது கவிதைகளைவிட அழகிய தோற்றப் பொலிவுகொண்டவன். அவன் புகழின் உச்சிநோக்கி விரைந்துகொண்டிருந்தபோது சில கவிஞர்கள் கவிதை எழுதுவதையே விட்டுவிட்டதாகக்கூடச் சொல்வர். அவனது கவிதைகள் சலசலக்கும் நீரோடைபோல் மென்மையானவையல்ல—காட்டாற்றுப் புதுவெள்ளம்போல் வேகம் நிறைந்தவை. விடுதலையின் சிறப்பை கதைகளில் வடித்த பைரன் தன் வாழ்நாளின் இறுதியில் தன்னையே கிரேக்கத்தின் விடுதலைக்குக் காணிக்கையாக்கிக்கொண்டான். அடுத்த ஆண்டு—1824ல் அவனது வாழ்வுக் காவியத்தின் இறுதிவரிகள் எழுதப்பட்டுவிட்டன.

''யாண்டு பலவாய் கிடந்தனன் அடங்கி, இந்த நெடுஞ்சுவரும் இருட்டறையின் சிலந்திகளும் வெண்ணிலவில் விளையாடும் சுண்டெலிகளும் எனக்கு நட்பாய் அமைந்தன. இனிமேல் எனக்கு விடுதலை எதற்கு?'' எனக்கேட்கும் 'சில்லான் கைதி' பற்றிய பாடல்கள் அவன் எழுதியவற்றில் எளிமையானவை.

நுண்மாண் நுழைபுலம் மிக்க — ஆன்றவிந்தடங்கிய கவிஞர்களின் படைப்புகளோடு ஒப்பிட்டால் பைரனுடைய படைப்புகள் வெறும் உணர்ச்சித் துடிப்புள்ள தீப்பொறிகள்தான்—'தரமான இலக்கியங்கள் அல்ல' எனச்சிலர் கூறுவர். ஆனால் அந்தத் துடிப்பு நிறைந்த உணர்ச்சிகளும் மதிக்கத்தக்கவையே அன்றோ!

—சிவ. அம்பிகாபதி



# தலைவன் வழியில்.....

தலைவன் நடந்து செல்கின்றான்—மக்கள்
தலைவன் நடந்து செல்கின்றான்!
துணிந்து நின்று துணைவலி கொண்டு
பனியதன் வெண்மைப் பணியது செய்து
இனிய உலகம் இன்றே படைக்க
புனிதர் காந்தி புத்தர் வழியில்

தலைவன் நடந்து செல்கின்றான்—தமிழர்
தலைவன் நடந்து செல்கின்றான்!
அன்னைத் தமிழை அரியாசனத்தில்
அன்போடமர்த்தி அகமே மகிழ
முந்நீர் வையம் முற்றும் ஒருங்கே
தன்வழித் தொடரத் தனிவழி மீதில்

தலைவன் நடந்து செல்கின்றான்—அறிஞர்
தலைவன் நடந்து செல்கின்றான்!
சொல்லுதல் வல்லான் சோர்விலன் தன்னை
வெல்லுதல் இல்லா வெற்றியைக் காண
காய்தல் உவத்தல் அகற்றிப் பொருளை
ஆய்தல் அறிந்த அறிவின் வழியில்

தலைவன் நடந்து செல்கின்றான்—கழகத்
தலைவன் நடந்து செல்கின்றான்!
அண்ணா வென்னும் அரும்பெயர் கொண்ட
தன்குடி காக்கும் தலைமையின் தலைவன்
முன்னே செல்ல அவன்வழி தொடர்ந்து
பின்னே சென்று பெரும்பணி செய்வோம்!

—தமிழ்நாடன்

# சர்வாதிகாரம்?

செய்யாறு செல்வம் எம். ஏ.

மக்களாட்சியில் வாழும் நமக்கு மக்களாட்சியின் அருமை, பெருமை தெரிவதில்லை. மக்களாட்சியில் நமக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளை முழுதாகப் பயன்படுத்திக் கொள்ளவும், கடமைகளை நிறைவேற்றவும் நாம் பயிற்சி பெறவேண்டும். வெயிலில் அலைந்து திரிந்தவனுக்குத்தான் நிழலின் அருமை தெரியும் என்பார்கள். அதைப்போல சர்வாதிகார ஆட்சியின் கொடுமைகளை— நாம் அனுபவிக்காவிட்டாலும், தெரிந்துகொண்டால் மக்களாட்சியின் மாண்புகளை உணரமுடியும்.

ஒரே கட்சி ஆட்சி அல்லது சர்வாதிகாரம் என்பது ஜனநாயகத்துக்கு நேர்முரணான ஓர் அமைப்பாகும். தனி மனிதனின் உரிமைக்கு மதிப்புத் தருவது சர்வாதிகாரம், தனி மனிதன் அவ்வளவு முக்கியமல்ல; நாடே முக்கியம், நாடே அனைத்தும் என்று கருதுவது. நாடு என்பது ஒரு மரமானால் தனி மனிதன் அந்த மரத்தின் எண்ணிறந்த இலைகளுள் ஒரு இலைக்குச் சமம். மரத்தில் இலைகள் துளிர்விடலாம்; சில நாட்கள் மரத்தில் இருந்து பிறகு பழுத்து காய்ந்து சருகாக உதிர்ந்து விடலாம். மீண்டும் புதிய இலைகள் துளிர்விடுகின்றன இலைகள் வரலாம் போகலாம். ஆனால் மரம் நிலைத்து நிற்கின்றது. அதைப் போலவே தனி மனிதர்கள் பிறக்கலாம்; மாளலாம். ஆனால் நாடு என்றும் நிலையாக நிற்கின்றது. எனவே நாட்டிற்காகத் தான் தனி மனிதர்களே தவிர, தனி மனிதனுக்காக அல்ல நாடு'' என்பதே சர்வாதிகாரத்தின் அடிப்படை.

இட்லரின் நாணயமும், முசோலினியின் பாசிஸமும் சர்வாதிகார அரசியல் கொள்கையின் சிறந்த வரலாற்று உதாரணங்களாகத் திகழ்கின்றன. சர்வாதிகார அரசியல் கொள்கையின்படி ஒரு நாட்டில் அரசாங்கம் விரும்பினால் — விரும்பினால் அல்ல கண்டிப்பாக—ஒவ்வொரு மனிதன் அல்லது குழுவினுடைய ஒவ்வொரு நடவடிக்கையையும் ஒவ்வொரு உரிமையையும் கட்டுப்படுத்தி அவற்றை நாட்டின் வலிமையைப் பெருக்குவதில் செலுத்தவேண்டும். அக்கொள்கையின்படி அரசாங்கம் என்பது தனது அதிகாரத்தில் முழுமை பெற்றதும் அவற்றைப் பயன்படுத்துவதில் வரம்பு கடந்ததுமாகும். நாட்டிலுள்ள எந்த ஒரு அமைப்பும் அரசாங்கத்திற்கு அப்பாற்பட்டதல்ல! ஒவ்வொரு உரிமையும் உடைமையும்—பொருளாதார, கலாசார உரிமைகளும், உடைமைகளும் நாட்டுடைமையின் பகுதியாகையால் அவை அரசால் கட்டுப்படுத்தப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும். அரசு அனுமதியின்றி, நாட்டில் அரசியல் கட்சிகளோ, தொழிற் சங்கங்களோ அல்லது ஆலை முதலாளிகள், வணிகர்களின் சங்கமோ அமைதல் கூடாது. அதன் கட்டுப்பாடில்லாமல் உற்பத்தியோ அல்லது வணிகமோ அல்லது உழைப்போ இருக்கக்கூடாது, அரசு அனுமதியின்றி எவ்வித வெளியீடுகளோ (பத்திரிகை புத்தகம் முதலியன.) பொதுக் கூட்டமோ இருக்கமுடியாது. நாட்டின் கல்வித் திட்டம், அரசு இயந்திரத்தின் ஒரு வன்மைமிக்க கருவியாகிவிட்டது. மதமும் அரசுக் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது கலாசார பொழுதுபோக்கு சாதனங்கள் அரசாங்கப் பிரசாரக் கருவிகளாயின. தனி மனிதனுக்கு எவ்விதமான தனிமை என்பதோ இரகசியம் என்பதோ இருக்கமுடியாது, தனி மனிதர்களின் எல்லா சங்கங்களும் அரசின் கட்டுப்பாட்டிற்குள் வந்தன. தனி மனிதனின் உரிமை திறமை, தனிமை எல்லாமே அரசோடு கலந்து நிர்மூலமாயின.

சர்வாதிகாரக் கொள்கை, அரசை நடத்திச் செல்லும் நடைமுறைக்குக் கையாளப்படும்போது தனி மனிதன் அல்லது குழுவின் சர்வாதிகாரமேயாகும்.

ஜெர்மெனியில் இட்லரின் சர்வாதிகாரம், ஜெர்மானியக் கூட்டாட்சியை ஒழித்துக் கட்டியது. மக்களாட்சியின் அஸ்திவாரமாக விளங்கிய உள்ளாட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டன. ஜனநாயக அரசியல் ஸ்தாபனங்களான பாராளுமன்றம், நீதி நிர்வாகம் ஆகியவை ஒடுக்கப்பட்டன. வாக்குரிமை என்பது திட்டமிட்ட ஒரு வாக்கெடுப்பாக (Managed Plebisite) மாற்றப்பட்டது. அரசியல் அதிகாரம் சர்வவல்லமை படைத்ததாய் ஆகிவிட்டதோடு மட்டுமன்றி, சமூக அமைப்பையே ஒரே கட்டுக்கோப்பின் கீழ்க் கொண்டுவந்து அரசின் தேவைகளை நிறைவேற்றவே பயன்படுத்தப்பட்டது.

சர்வாதிகார ஆட்சியில், சர்வாதிகாரியின் கையில், அதாவது கொள்கையை வகுக்கும் உச்சக்கட்டத்தில் அளவு கடந்த அதிகாரம் குவிந்துள்ளது என்பது உண்மையே. சர்வாதிகாரியின் அதிகாரம் அவனது தனிப்பட்ட புகழையும், அவனது கொள்கையை நிறைவேற்றும் நிருவாக இயந்திரத்தின் திறமையையும் பொறுத்துள்ளது.

''ஆனால் நடைமுறையில் பொறுப்பற்ற முழு அதிகாரம் சர்வாதிகார ஆட்சி முறைக்கு ஒவ்வாததாக உள்ளது. நிச்சயமில்லாத அரசியல் சூழல், காரண காரியமற்ற மாற்றங்கள், பழிக்குப் பழி வாங்கல் ஆகிய சூழ்நிலையில், அதிகார பீடத்தில் உள்ள ஒவ்வொரு நபரும், திடீர் மாற்றங்களிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள எவ்வளவு அதிகாரத்தைக் கைப்பற்றமுடியுமோ அவ்வளவு அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிக்கிறான். இதனால் இறுதியில் தலைமைப் பீடம் என்று ஒன்று இல்லாமல் அது வெறும் சூன்யம் ஆகிவிடுகிறது.

நிர்வாகத் துறையில் இந்த நிலைமை என்றால் சட்ட ரீதியில் நிலைமை இதைவிட மோசமானதாக இருக்கிறது. இட்லரின் நாஸிஸ ஆட்சியில், அரசாங்கத்தின் எந்தப் பிரிவிலும் அதிகார நிர்ணயம் தெளிவாக செய்யப்படவில்லை.

ஏற்கனவே இருந்த பொது நிர்வாகம் ஆகியவை அப்படியே விடப்பட்டன. ஆனால் அவற்றில் கட்சி ஆட்கள் பரவலாகப் புகுத்தப்பட்டனர். அவர்கள் அத்துறைகளின் வழக்கமான செயல்முறைகளைத் தகர்த்தெறிந்தனர். இவற்றோடு நில்லாமல் பல புதிய இலாகாக்கள், அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு, பழைய இலாகாக்களின் வேலைகளையும் சில புதிய வேலைகளையும் அவை மேற்கொண்டன. இதனால் எங்கும் எதிலும் குழப்பம் ஏற்படலாயின.

இட்லரின் ஜெர்மெனியில், நாஸிஸக் கட்சி ஒன்றுதான் அரசியல் கட்சியாக இயங்க அனுமதிக்கப்பட்டது. சட்டப்படி, நாஸிஸக் கட்சி ஒரு கழகமாக அங்கீகாரம் பெற்றதாயினும் அக்கட்சி சட்டவரம்பிற்குக் கட்டுப்பட்டு நடக்கவில்லை. நாஸிஸக் கட்சியைச் சார்ந்த இலைட் கார்ட் புயல் படை, இட்லர் இளைஞர் படை, ஆகியவை சட்ட நீதி நிர்வாக அதிகாரமும், விசேஷ சலுகைகளும் பெற்றிருந்தன. நீதி நிர்வாகம் தனது சுதந்திரத்தை இழந்துவிட்டது. அதே நேரத்தில்

(15-ம் பக்கம் பார்க்க)

# காஞ்சி

## 4-ம் ஆண்டு மலர்

**வந்தால்-தந்தால்-தருவேன்!**
(அமைச்சர் மா. முத்துசாமி)

**அரிமா நோக்கு!**
(என். வி. நடராசன்)

**விரலுக்குத் தக்க வீக்கம்!**
(மா. கி. தசரதன்)

**எனது பயணம்!**
(அரங்கண்ணல்)

**மெய்யறிவு!**
(அ. மு. பரமசிவானந்தம்)

**இரவு என்ற குருவி!**
(சோமு)

**ஆகா! ஜப்பான்!**
(அண்ணல்)

**இரட்டைக் கொலை!**
(எஸ். எஸ். தென்னரசு)

முதலான கருத்துக் கருவூலங்களோடு

**அறிஞர் அண்ணாவின்
அமெரிக்கப் பயணத்தில்...!**

என்ற தலைப்பில் அண்ணாவின் தனிச் செயலாளர் கு. சொக்கலிங்கம், I.A.S. அவர்களது புதிய செய்திகளோடுகூடிய சிறப்புக் கட்டுரையும்,

**அறிஞர் அண்ணா அவர்கள்**

படைக்கும் தீஞ்சுவைக் காப்பியங்கள் பலவோடு

**செப்டம்பரில் வெளிவருகிறது!**

# காழ்ப்புதான் காரணம்!



நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டதால் இந்த அரசுக்கு மாசு கற்பிக்கப்பட்டதாகவோ ஊறுவிளைந்து விட்டதாகவோ நான் கருதவில்லை, எத்தனை தடவை வேண்டுமானாலும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வாருங்கள், பொதுமக்களுக்கு எங்களிடம் நம்பிக்கை இருக்கும் வரையில் நாங்கள் அதுபற்றிக் கவலைப்படவில்லை.

குடிசைத் தீ விபத்துக்கள் பற்றிய போலீஸ் அதிகாரியின் அறிக்கையை, கோர்ட்டில் வழக்குகள் இருக்கிறபோதிலும் வெளியிடுமாறு திரும்பத் திரும்ப வற்புறுத்துவதன் மூலம் மக்களிடையே எந்த தவருன கருத்தையும் ஏற்படுத்திவிடமுடியாது, அதே மாதிரி உலகத் தமிழ் மாநாட்டுக் கணக்குகள் பற்றி குற்றம் சாட்டுவதன் மூலம் கழகத்திற்கும் மக்களுக்குமிடையே உள்ள தொடர்பை அறுத்துவிடமுடியாது. எதற்கெடுத்தாலும் நீதி விசாரணை கேட்கும் காங்கிரசார் 5 ஆண்டுகளுக்கொருமுறை மக்கள் மன்றம் அளிக்கும் தீர்ப்பைக் கவனிக்கட்டும். எதிர்க்கட்சித் தலைவர் இந்த அரசை செயலற்ற சர்க்கார் என்ருர். இடமறியாமல், வகையறியாமல், அவர் பேசினுரே தவிர, நாங்கள் கூறிய விளக்கங்களை உணரவில்லை. மொத்தத்தில் தி. மு. க, ஆளும் கட்சியாயிருப்பதை காங்கிரஸால் சகித்துக்கொள்ள முடியவில்லை.

கடந்த காலத்தில் நமது மாநிலத்தில் ஏற்பட்ட பெரிய தொழில்கள் மத்ய சர்க்காரினுல் ஏற்படுத்தப்பட்டவை. அதன் நிர்வாகத்தில் மாநில சர்க்காருக்குப் பங்கில்லை. அவை5 ஆண்டுத் திட்ட அடிப்படையில் ஏற்பட்டவை. மூன்றும் 5 ஆண்டு திட்டம் தோல்வியடைந்தது. நாலாவது 5 ஆண்டு திட்டம் திடீரென்று நிறுத்தப்பட்டது. பிறகு எப்படி இங்கு புதிய தொழில் வளர முடியும்? என் காலையையும் கையும் கட்டிவிட்டு ஏன் ஓடவில்லை என்று கேட்கிறீர்களே! 1968 மார்ச் வரை 32 பேர் புதிய தொழில் ஆரம்பிக்க முன்வந்திருக்கிருர்கள். தமிழகத்தில் தொழில் வளர்ச்சி ஏற்படவில்லை என்று எப்படிக் கூறமுடியும்? முதலாளிகளுக்கு தி. மு. க. அரசிடம் நம்பிக்கையில்லை என்று கூறுவது பொதுமக்கள் மேலும் தி. மு, க. அரசை ஆதரிக்கவே துணை செய்யும்.

நிலையான தெளிவான தொழில் கொள்கையில்லாததால் தான் தொழில் வளர்ச்சி ஏற்படவில்லை என்று எதிர்க் கட்சித் தலைவர் கூறினுர். எங்கள் தொழில் கொள்கையில் பாதகமானது எதுவுமில்லை என்று திரு. ஆர். வெங்கட்ராமன் கூறியுள்ளார். விஷயமறிந்த அவர் அவ்வாறு சொன்ன பிறகு விஷயமறியாதவர்கள் பேச்சுப்பற்றி கவலைப்படாமல் ஆறுதலடைந்தேன். 1967-68ம் ஆண்டிற்கு 84,9 கோடி ரூபாய்க்குமேல் திட்டம் போடக் கூடாது என்று மத்திய சர்க்கார் கூறியது. ஆனுல் 98 கோடி ரூபாய்க்கு திட்டம் நிறைவேற்றியுள்ளது தமிழக சர்க்கார். இது செயலற்ற சர்க்காரா? அரசியல் காழ்ப்பு உள்ளவர்கள் நாங்கள் எது செய்தாலும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

விவசாயத் துறையில் தஞ்சை மாநிலத்தில் 2,25 லட்சம்

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

நீதிபதிகள் தங்கள் 'விருப்பப்படி' தீர்ப்பு வழங்க அனுமதிக்கப்பட்டனர். சட்டமே தெளிவில்லாமல் இருந்ததால் அதன் அடிப்படையில் அமைந்த தீர்ப்பும், நீதிபதியின் விருப்பு வெறுப்பைபொறுத்திருந்தது. ஒரு பத்திரிகையானது, ஜெர்மெனியின் ஒற்றுமையைக் குலைப்பதான அல்லது ஜெர்மெனியின் தன் மதிப்பைக் குறைப்பதான அல்லது கேலி செய்வதான அல்லது சொந்த நலனை வளர்ப்பதான எவ்வித செய்தியும் வெளியிட்டால், அதன் வெளியீட்டு உரிமை பறிக்கப்படலாம். இதைப்போன்ற தெளிவில்லாத சட்டங்களில் நடுநிலைமை நிர்வாகமே இருக்கமுடியாது. சட்டத்தின் முன் யாவரும் சமம் என்ற ஜனநாயகக் கொள்கை புதைக்கப்பட்டு, நிர்வாகத்தின் விருப்பம்போல் சட்டம் வளைந்து கொடுத்தது.

நீதி நிர்வாகத்தைப் போலவே, சமூக, பொருளாதாரத் துறைகளிலும் சர்வாதிகாரம் தனது இரும்புப் பிடியை இறுக்கியது. சமூக, பொருளாதாரத் துறைகளில் ஒவ்வொரு நடவடிக்கையும், அரசின கட்டுப்பாட்டின் கீழ் கொணரப்பட்டது. நடைமுறையில் இதன் விளைவுகளை நாம் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். அதன் முதல் விளைவாக சமூக, பொருளாதாரத் துறைகளில் ஏற்கெனவே செயல்பட்டு வந்த பல அமைப்புகள் ஒழிக்கப்பட்டு விட்டன. தொழிற் சங்கங்கள், வணிகச் சங்கங்கள், முதலாளிகளின் சங்கங்கள், கலாசாரக் கழகங்கள், முதியோர் கல்விக்கூடங்கள் ஆகியவை கலைக்கப்பட்டன, அல்லது அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு புதிய நிர்வாகிகள் நியமிக்கப்பட்டனர்.

இட்லரின் ஜெர்மெனியில், தொழில் அடிப்படையில் தொழிற் சங்கங்கள் அமைக்கப்படவில்லை. நாஸிஸக் கட்சியின் ஒரு பிரிவாக தொழிலாளர் முன்னணி என்ற ஓர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. தொழிலாளர் முன்னணியில் ஒவ்வொரு தொழிலாளியும் கட்டாயமாக உறுப்பினராகச் சேர்ந்தாக வேண்டும். தொழிலாளர் முன்னணிக்கு தொழிலாளர் சார்பில் முதலாளிகளிடம் வாதாட எவ்வித உரிமையும் அளிக்கப்பட வில்லை. கூலி, வேலை நேரம், விடுமுறை போன்றவை அரசால் நியமிக்கப்பட்ட தொழில் அறங் காவலர்களால் (Labour Trustees) நிர்ணயிக்கப்பட்டது.

ஆக சர்வாதிகார ஆட்சியில் தொழில் துறையில் முதலாளிகளும் தொழிலாளர்களும் சுதந்திரமாகச் செயல்படும் உரிமையை இழந்து விட்டனர். நாஸிஸ ஜெர்மனியிலும், பாஸிஸ இத்தாலியிலும், அரசால் (அல்லது ஆளும் கட்சியால்) நியமிக்கப்பட்ட நபர்கள் வசமே, தொழில் துறையின் 'இறுதிக் குரல்' இருந்தது. அவர்கள் பெரும்பாலும் முதலாளிகளின் பக்கமே நின்றனர். தொழிலாளர்கள் கண்ட ஒரே பலன் அவர்களுக்கு வேலையின்மை என்ற பிரச்சினையே இல்லாமல் இருந்தது தான்! ஆனால் தொழிலாளர்களின் கூலி மிகவும் குறைவாகவே இருந்தது.

பொருளாதாரத்தில் எங்ஙனம் சர்வாதிகார ஆட்சியின் பிடி இறுகியதோ, அதைப் போலவே கலாசார வாழ்வின் ஒவ்வொரு துறையிலும்—பத்திரிகை கல்வி, கலை ஆகிய துறைகளில் சர்வாதிகாரம் தலையிட்டு அவற்றை முழுதுமாகக் கட்டுப்படுத்தியது. அறிவியல் உட்பட எல்லாத் துறைக் கல்வியும் தேசீய இனப்பற்றை ஊட்டும் சாதனமாக விளங்கியது. கல்வியின் இறுதி நோக்கமே இளைஞர்களின் உள்ளத்தில் இனப் பற்றையும், இன உணர்வையும் ஊட்டுவதே என்று ஆகிவிட்டது. இரத்தக் கலப்பற்ற தேசீய இனத்தின் இயல்பையும் தேவையையும் அறிந்துகொள்ளாமல் எந்த ஒரு சிறுவனோ சிறுமியோ பாடசாலையை விட்டு வெளியேறக் கூடாது!

கல்வித் துறையில் நாஸிஸத்தின் கட்டுப்பாடு, அதற்குப் பெரும் சோதனையாகவே விளங்கியது. இராணுவ வலிமையை உச்சகட்டத்தில் வைத்திருப்பதையும், அறிவுத் துறையை உயர்ந்த பட்சக் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வருவதையும், குறிக்கோளாகக் கொண்ட ஆட்சி நாட்டின் கல்வித் திட்டத்தையே விசித்திரமான சோதனைக்காளாக்கியது. சமூக வியலைத் தனக்கு ஏற்றாற் போல் பிரசார சாதனமாக மாற்றும் நாஸிஸ ஆட்சி, இராணுவ வலிமைக்கு அடிப்படையாக விளங்கும் அறிவியல் வளர்ச்சியை சுதந்திரமானதாக வைத்திருக்க முடியுமா என்பதுதான் கேள்வி! முன்னதில் தோல்வியுற்றால் ஆட்சி நிலைப்பதற்கான காரணத்தை இழந்துவிடுகிறது. பின்னதில் தோல்வியுற்றால் ஆட்சி நிலைப்பதற்குத் தேவையான அஸ்திவாரத்தையே அது இழந்து விடுகிறது! ●

---

ஏக்கர்கள் ஒருபோக சாகுபடியிலிருந்து இருபோக நிலங்களாக மாற்றப்பட்டுள்ளன. 586 இலக்கு உள்ளபோதிலும் 749 சிறிய பாசனத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. 10,000 ஆழ் கிணறுகள் தோண்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டதற்குப் பதில், 14000 ஆழ் கிணறுகள் தோண்டப்பட்டன. வடிமுனைக் கிணறுகளும் இலக்குக்கு அதிகமாகத் தோண்டப்பட்டன

மந்திரி மாதவன் தொகுதியில் ஒரு ஆஸ்பத்திரி நிதிக்கு, கூட்டுறவுச் சங்க நிதியிலிருந்து பணம் தரப்பட்டதுபற்றி திரு. பூவராகன் குறை கூறினர். நல்ல காரியத்திற்கு எந்த ஸ்தாபனத்திடமிருந்தும் பணம் திரட்டுவதில் முறைப்பிசகு எதுவும் இல்லை. திரு பக்தவத்சலம் பாலிடெக்னிக்கிற்கு கூட்டுறவு சங்க நிதி ஒதுக்கப்பட்டது. நீங்கள் செய்தால் நியாயம், நாங்கள் செய்தால் அநியாயம் என்ருல் அதற்கு அரசியல் காழ்ப்புதான் காரணம்.

ஆகஸ்டு முதல் தேதி நடைபெற்ற தடியடியில் 19 பேருக்குத்தான் படுகாயம் என்று ஆஸ்பத்திரி பதிவேட்டில் உள்ளது. அடிபட்டவர்கள் எண்ணிக்கை 600 பேர் என்று ஒரு பயங்கரத்தை சித்திரிப்பது கற்பனையானது. அந்த திறமைக்குப் பாராட்டுகள். போலீஸ் உடையில் யாரோ வந்து தாக்கியதாகக் கூறப்பட்டது, எந்த ஈனத்தனமான சர்க்காரிலும் அப்படி நடக்காது. வெளி மாநில நீதிபதியைக் கொண்டு வரவேண்டுமென்ற கோரிக்கையில் நியாயமில்லை

உரத்தின் விலையைக் குறைக்குமாறு மத்திய சர்க்காரை வற்புறுத்தாமல் கொள்முதல் விலையைக் குறைக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் கேட்பது சர்க்காருக்கு இக்கட்டான நிலையை உண்டாக்கும் நோக்கத்துடன் செய்யப்படுகிறது.

லாட்டரி சீட்டுபற்றி ராஜாஜி கூறியதை நான் கேட்காததால் எங்களிருவருக்கும் இடையே தகராறு வரும் என்று காங்கிரஸ்காரர்கள் எதிர்பார்க்கிருர்கள். அப்படி வராது. அவர் கொண்டுள்ள சில லட்சியங்களை எந்த அரசாங்கமும் கடைபிடிக்க முடியவில்லை. ஆனால் அவர் கருத்து மதிக்கத்தக்கதே. சுதந்திரா கட்சி ஆட்சி நடக்கும் ஒரிஸாவில்கூட லாட்டரி சீட்டு சர்க்கார் ஆதரவுடன் நடக்கிறது.

கடவுள் படங்கள் அரசாங்க அலுவலகங்களில் கூடாது என்ற உத்திரவுக்கும் மத நம்பிக்கைக்கும் சம்பந்தமில்லை. மக்களுடைய மத நம்பிக்கையில் குறுக்கிடவோ எங்கள் கருத்தை திணிக்கவோ நாங்கள் விரும்பவில்லை. பெரியார் உங்கள் செலவில் ராமாயண எதிர்ப்புப் பிரசாரம் செய்தபோது ஆஸ்திகம் அழிகிறதே என்று நீங்கள் கதறவில்லையே? ஏன்?

—தமிழக சட்டமன்றத்தில் முதலமைச்சர்.

# கேள்வி ? பதில்

**1. அறிவு எப்போது முடங்கிப் போகிறது?**

மிகவும் வேண்டியவர் என்று கருதிக் கொண்டிருக்கிற யாராவது, நம் ஆத்திரத்தைத் தூண்டி விடுகிறபோது செயல்பட்டுக் கொண்டிருக்கிற அறிவாற்றல் முடங்கிப்போகும். அதுபோலவே அறிவின் உணர்ச்சிப் பெருக்கம் செயல்படுத்தப்படாமல், முடக்கி விடப்படும்போதும், தானாகவே முடங்கிப் போவதுண்டு!

**2. மேனாட்டார் வாழ்க்கை வரலாறுகளைப் படிக்கிறபோது, பலபேர் எழுத்துத்துறை ஒன்றினாலேயே புகழ்ப் பெற்றிருக்கிறார்கள்; அதுபோல் தமிழ்நாட்டில் யாரேனும் உண்டா?**

டாக்டர் மு. வரதராசனாரை எந்த வழியில் நீங்கள் அறிந்து வைத்திருக்கிறீர்கள்!

**3 துப்பாக்கிச் சூடுகள் தவிர்க்கப் பட முடியாதவையா என்ன?**

முழுதுமாகத் தவிர்க்கப்பட வேணடும் என்பதுதான் முதலமைச்சர் அண்ணா அவர்களது விழைவு. ஆனால துபபாக்கிச்சூடு நடத்தும் நிலைமைகளையே வலுக்கட்டாயமாகத் திணிக்கின்றவர்களும் அரசியலில் புகுந்துகொண்டிருக்கிறார்களே! அதுதான் அரசியல் என்றும் அவர்கள் கருதுகிறார்களே! தவிர்க்கப்பட்டுவிட முடியுமா என்ன?

**4. பஞ்சாப் அமைச்சரவை கவிழ்ப்பின் பெருமை யாரைச் சேர வேண்டும்?**

அந்தப் பெருமை வழக்கம்போல், காங்கிரசுக்குத்தான்! என்றாலும் சிறுபான்மை பலம் கொணடவர்களோடு, பெரும்பான்மைக்கட்சி கூட்டுச்சேர்நது அமைச்சரவை அமைததிருந்தது அகலத்துக்கே ஒரு முன்னுதாரணம! காங்கிரசின பல எதேச்சாதிகாரங்களுக்கு சில இடம் கொடுக்க மறுத்ததனாலேயே, காங்கரஸ் ஆதரவைத திருமபப் பெற்றுக்கொணடதாம்! இதை, முதலிலேயே செய்திருநதால், அரியானாவைப்போல், மறு தேர்தல் நடத்தப்பட்டு, அங்கே புதிய ஆட்சியாவது அமைந்துவிட்டிருக்கும். பஞ்சாபில் சுதநதரத்துககுப பிறகு மூனறும் முறையாக ஜனாதபதியன ஆட்சியாம்! இந்தக் காங்கரசார், மக்களை வாழவும் விடுவதில்லை—சாகவும் அனுமதிப்பதில்லை! என்ன அரசியலோ! என்ன கொள்கையோ!

**5. தி. மு. க. மதிப்புக் குறைவதாக காமராசர் பேசுவதை எதற்கு ஒப்பிடலாம்?**

மூன்று இடைத் தேர்தல்களில் முட்டி மோதி உடைபட்ட பின்னரும் இப்படிப் பேசுகிறார்! இரண்டாவது உலகப் போரின்போது, பிரிட்டன் ஒவ்வொரு நாடாக ஜெர்மனியால் தோற்கடிக்கப்பட்டு வந்தபோது, தோற்ற ஒவ்வொரு இடத்துக்கும் வெற்றி விழாக்களைக் கொண்டாடிக்களித்தது! இதனோடு ஒப்பிட்டுப்பார்க்கிறீர்களா!

**6: கழக அரசுமீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் எதைப் பிரதிபலிக்கிறது?**

பெரும்பான்மை பலத்தில், தனித்து ஆட்சி அமைத்துள்ள கழக அரசைக் கவிழ்த்துவிட முடியும் என்பதால் அல்ல—இந்த உரிமை காங்கிரசுக்கு உண்டு. என்றாலும் எப்படியாவது களங்கம் கற்பித்துக் கூற ஒரு வாய்ப்புக் கிடைக்காதா என்ற எச்சிலின் ஊறல்தான் காரணம்! நம்பிக்கை இன்மைக்குக் கூறப்பட்டிருக்கிற காரணங்களில் பல, போலியானவை—பல பொய்யானவை—பல ஆதாரமற்றவை என்பதிலிருந்தே இது தெரியவில்லையா! காங்கிரஸ்கூட, ஒரு ஜனநாயக மரபைப் பின்பற்ற முடியும் என்பதைப் பிரதிபலித்துக் காட்டுவதுதான் இது!

**7. காந்தி நூற்றாண்டு விழாக் கமிட்டியினர் மதுவிலக்கைத் தீவிரமாக அமுல்படுத்தவேண்டும் என்பதிலிருந்து பெறப்படுவது என்ன?**

இந்தக் கமிட்டியினருக்கும்—நாட்டை ஆண்டு கொண்டிருப்போருக்கும்துளியும்தொடர்பில்லை என்பதும், இந்தக் குழுவினரின் கருத்துக்கு மேலிடத்தில் மதிப்பில்லை என்பதையும் காட்டுகிறது. இல்லையென்றால் "புநிதம்" என்று கூறப்படும் அரசியல் சட்டமே மதுவிலக்கை ஆதரிக்கும்போது, காங்கிரஸ் மாநிலங்களில் அது விற்க அனுமதிக்கப்படுமா?

**8. ராஜாஜி அவர்களை எதற்காவது முன்னுதாரணம் காட்டிப் பேச முடியுமா?**

ஏன் முடியாது! மனதில் பட்டதை துணிவோடு. யார் பற்றியும் தயவு தாட்சண்யம் கருதாமல் பட்டென்று எடுத்துக் காட்டுவதில் அவருக்கு நிகர் அவரேதான்! இதுவும் ஒரு உயரிய வரவேற்கத்தக்க உதாரணம்தானே!

**9. செக். நாட்டின் மீதான ரஷ்ய நடவடிக்கையை வேறு நாடு ஏதேனும் ஆதரிக்கிறதா?**

பெடல் காஸ்டிரோவைப் பிரதமராகக் கொண்ட 'கியூபா' ஆதரிக்கிறது. அதுவும் அரசியல் ரீதியாக மட்டும்தான் சரி என்கிறது! ஆக்கிரமிப்பு முறை என்கிற வகையில் அது தவறானதாம்!

**10. கோவை மில்களின் விவகாரம் இப்போதுதான் தொடங்கி இருக்கிறதா?**

இல்லை. 1960லேயே தொடங்கி விட்டதாகத்தான் தெரிகிறது. இடைக்காலத்தில் இருந்தவர்கள் இதுபற்றிக் காட்டிவந்த அலட்சியம், இப்போது பூதாகாரமான வடிவத்தைத் தோற்றுவித்துக் காட்டுகிறது!

**11. பாரதியாருக்கு நினைவு நாள் கொண்டாடுவது செப்டெம்பரிலா? டிசம்பரிலா?**

சில பேர் செப்டெம்பரில் கொண்டாடுகிறார்கள். அது அவரது பிறந்த மாதமாகையால்! இன்னும் சில பேர் டிசம்பரில் கொண்டாடுகிறார்கள். அது அவர் மறைந்த மாதம் என்பதால்! பிறந்ததற்குக் கொண்டாட்டமா? மறைந்ததற்குக் கொண்டாட்டமா என்பதை நீங்களே முடிவெடுத்துக் கொள்ளுங்கள்!

★

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-8
86, திருக்கச்சிநம்பி தெரு. அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.